பந்நிராதிபர் உத்தரயாத்திரை.

பின் பல்லாரியை விட்டுநீங்கிச் சென்னையையடைந்து அங்கு ஒருவாரம் வசித்தனர். அவ்விடத்தில் கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் "பைபிலிற் சொல்லியபடி கிறிஸ்து கடவுள்" என்பதைப் பற்றி நடந்த விவாதத்தில் அவ்விருதிறத்தாரின் கோரிக்கைப்படி இரண்டு தினம் மத்தியஸ்தஞ்செய்து ஈற்றில் கிறிஸ்து கடவுளல்லவென்று அவ்விருபாலார் மனமுவப்பத் தீர்மானஞ்செய்து, பச்சையப்பர் வேண்டுகோளுக்கிசைந்து ஓர்தினம் தற்கால நாஸ்திகத்தின் குற்றங்களைக்குறித்தும், மற்றோர்தினம் கிறிஸ்துமத ஆசாரங்களைக் குறித்தும், மற்றோர் தினத்தில் இந்துமதத்தின் மேன்மையைக் குறித்தும் உபந்நியசித்து, பின் அவ்விடத்தைவிட்டகன்று திருப்பதிமுதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு மீண்டு காஞ்சீபுரத்தை யடைந்து அவ்விடத்திலே பச்சையப்பன்ஹைஸ்கூலில் சென்னையில் நடைபெற்றுவரும் இந்து ட்ராக்ட் சொஸைட்டியைக் குறித்தும், இந்துமதத்தின் மேன்மையைக் குறித்தும் ஓர் உபந்நியாசஞ் செய்து அவ்விடம்விட்டு ஜூலை மீ 10-உ யாத்திரை முடித்தனர்.

"The Religious Endowment Bill which is about to be taken up for discussion in the Madras Legislative council is the principal subject of discussion with a large class of people in the Southern Presidency. There is a strong party in favour of the Bill and is a stonger one which is opposed to *it*. The latter party hold that a legislation for the supervision of Religious Endowment is unnecessary and very injurious. The opinion of the Non-English Educated community in madras has not been taken on the subject; and it is apprehended that the only good which the Bill will probably do, is to create at the expense of the Endowments a number of high-salaried and well-paid appointments in the Presidency" Amrita Bazzar Patrika 7. July. 87.

வி ள ம் ப ர ம்.

இந்து மதங்களுக்குரிய புஸ்தகங்களின் மிகத்தாழ்வான விற்பனை.

புஸ்தகங்களின் பெயர்.	குறைந்த விலை. ரூ	அ	பை	முன்விலை. ரூ	அ	பை
சாந்தோக்கியோபநிஷத்துகள் அத்வைத விசிஷ்டாத்வைதபாஷிய ஸகிதம். (தெலுங்கு)	2	6	,,	3	8	,,
வேதாந்த தீபம். டி	1	6	,,	2	,,	,,
யதீந்திரமத தீபிகை டி	,,	5	,,	,,	8	,,
பகவத்விஷயங்கள் 2-9 பத்துகள் பிரதி (தெலுங்கு) ...	4	12	,,	7	,,	,,
,, 3-5 7-10 ,, ,, டி ...	5	6	,,	8	,,	,,
,, 4-6 ,, ,, டி ...	6	4	,,	9	,,	,,
,, 8 ,, ,, டி ...	4	,,	,,	6	,,	,,
கிரந்த எழு உபநிஷத்துகள் அத்வைத விசிஷ்டாத்வைத பாஷிய ஸஹிதம்.	6	12	,,	10	,,	,,
திருவாய்மொழி பிரதிபதம்.	2	11	,,	4	,,	,,
திருச்சந்த விருத்தம்	,,	2	,,	,,	4	,,

பச்சையப்ப டிரஸ்டீஸ் ஆபீஸ் பட்டணம் 1887-வரு ஜனவரிமீ 28.உ

இ. பாலசுந்தரமுதலியார் காரியதரிசி.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

மாதம் ஒருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

பத்திர கிரயம். ரூ 1-இ ரூ 1. 12. 0. மீ 6 இ ரூ 1. 0. 0. மீ 3 இ ரூ 0. 9. 0. காபி 1-இ ரூ 0. 3. 6. இலங்கைக்கு ரூ 1இ ஆ 2—4—0.

[illegible]

உ-ம் புத்தகம். சிதம்பரம்:—சர்வஜித்துவரு ஆவணிமீ கஎ-உக்கு கஅஅஎவரு ஆகஸ்டுமீ ௩௧-உ புதன்கிழமை. இலக்கம்-௩.

[illegible]

[illegible]

ஓர் உபந்நியாசம்.

(முன் தொடர்பு.)

ஐரோப்பாதேசத்திலே இவ்விதமாய நடவடிக்கை கிடையாது. ஒருவர், யாவரும் சேர்ந்து புசிக்கும்படி ஏற்பாடுசெய்து மற்றொருவரை அங்கழையாவிட்டால் அவர்கள் அதை மிகக் குறைவாக எண்ணுவார்கள். இத்தேசத்திலோ கீழ்வருணத்திற் பிறந்த ஒருவர் மேல்வருணத்தவரைத் தம் வீட்டிலே போசனத்திற்கழைத்தால், அது மிக அவமானமென்றெண்ணி அவர்கள் கோபித்துக்கொள்வார்கள். பெரும்பான்மையும் இத்தேசத்தவர்கள் தத்தம் ஜாதியே உயர்ந்ததென்றெண்ணுகிறார்கள். பாண்டிநாட்டிற் பிறந்த சில நான்காம்வருணத்தவர்கள் உயர்ந்த பிராமண குலத்திற் பிறந்தவர்களைப்போல் மிக உயர்ந்த ஆசாரங்களை யனுஷ்டித்துக் கர்வித்திருக்கிறார்கள். ஓர் ஐரோப்பிய பண்டிதரால் துரான் என்றழைக்கப்பட்ட ஓர்வகைச் சூத்திரர்கள் தமது வீட்டிலே பிராமணர்கள் நுழைவராயின் அவ்விடத்தில் ஆசாரங் குன்றியதெனத் தமது வீட்டிலுள்ள பாண்டங்களை எடுத்தெறிந்து விடுகின்றார்கள். நமது தேசத்திலுள்ள எந்தக் கீழ்வருணத்தவனும் தாம் கொண்ட தொழில் எவ்வளவு சிறியதாயிருப்பினும் உயர்ந்த அதிகாரத்திலுள்ள ஓர் ஐரோப்பிய பிரபு அவனைத் தம் வீட்டிற்குப் போசனத்துக்கழைத்தால் அவ்விடம் செல்ல மனங்கொள்வதில்லை. கூடப் புசிப்பதென்பது தம்மினத்தாருள் நம்மவர்க்கு ஏற்பட்ட ஓர் தருமமே. அங்ஙனம் ஐரோப்பியர்களுக்கில்லை. ஐரோப்பியர்களுக்குள் ஏற்பட்டிருக்குங் கட்டுப்பாட்டின்படி தள்ளப்பட்ட சில விவாகங்களைப்போல் நம் தேசத்தவர் ஏற்படுத்தியது அவ்வளவு கடினமல்லவென்றும் எண்ணகூடும். நம் தேசத்தார் ஓர் ஜாதியில் மற்றொரு ஜாதியார் விவாகஞ்செய்தல் கூடாதென்று சொல்லியதோடு நில்லாது, ஒரே ஜாதியிலும் சகோத்திர முதலிய சில தன்மைகளுங் கூடாதென ஏற்பாடுசெய்திருக்கின்றார்கள். ஒருவருக்கொருவர் நன்றாயறிந்து சிநேகிதர்களாய் ஓர்பந்தியில் போசனஞ்செய்பவர்களாயிருந்தபோதிலும்

[illegible]

ஒருவருக்கொருவர் விவாக சம்பந்தம் செய்துகொள்வதில் மிக அச்சமுள்ளவர்களாயிருக்கின்றார்கள். இவ்வுலகத்தில்கண்ணே விவாகவிஷயத்தில் நிர்ப்பந்தமில்லாத தேசம் ஒன்றேனும் தே ழ்வியுர்திலேம் மிகுந்த நாகரிகமுடையதெனச் சொல்லப்படு டிய ஐரோப்பாதேசத்தாரிலும் விவாகவிஷயத்தில் வெகு நிர்ப் பந்தமிருக்கின்றது. சில விஷயங்கள் செய்யினும் செய்யா விடினும் விடலாமென்று ஏற்படுத்துவதிலும் முற்றிலும் கூடா தெனமறுத்தலே மேலாகும். இங்ஙனம் ஏற்பட்ட கட்டுப்பா டுகளை மீறி விவாகம் நடந்தால், அவ்விவாகம் பயன்படாதென பது யுத்திக்கெட்டாத ஓர் விசித்திரசித்தாந்தம். உலகத்திலே எக்காலத்திலும், எவ்விடத்திலும், பிறப்பினாலும், இடத்தாலும், அறிவினாலும், பணத்தாலும் ஏற்பட்டிருக்கும் வேறுபாடுகள் ஒரேவிதமாயுள்ளனவாதலால், அவைகளைக் காக்கப்[illegible] லும் மூர்கூறிய விஷயங்களில் ஒருவருக்கொருவர் சமமாயுள்ள பெண்களும் புருஷர்களும் விவாகஞ்செய்துகொள்வதே யுக்த மாம். நம் தேசத்துப் பெண்களைக்காட்டிலும் ஐரோப்பாதேச த்துப் பெண்கள் மிகச் சுதந்திரமுள்ளவர்களானபடியால், அவ் விடத்தி விடர்நேரிவ தரிது. அத்தேசத்திலே குலத்திலும் பணத்திலும் சிறந்த ஒருவன் தனக்கேற்ற குலம் செல்வம் மு தலியவை பொருந்திய ஓர் பெண்ணினும் அவைகளில்லாத சா மானியகுலத்திற் பிறந்த மற்றொரு பெண்ணைத் தனக்கு ஏற்ற வளென எண்ணுவான். அவ்விதமே பெரிய பிரபுவின் குமார த்தியாயுள்ள வொருத்தி தனம் குணம் முதலியவற்றில் தனக் குச் சமமான ஓர் புருஷனைக்காட்டிலும் மற்றோர் ஏழையாகிய புருஷனைத் தனக்கு நாயகனாக விரும்புவாள். இவ்விதமான விவாகங்கள் அவர்களைப் பெற்றவர்களுக்கும், உடன்பிறந்தவர் களுக்கும், ஏனைச் சுற்றத்தவர்களுக்கும் மனவருத்தமாகவே யிருக்கும். இத்தேசத்தவர் ஜாதியிலபிமானம்வைத்தல்போல அத்தேசத்தவர் பொருளிலும் குலத்திலு மபிமானம்வைத்த வர்கள். ஒருவருக்கொருவர் சமநிலையில்லாத ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் அத்தேசத்தில் விவாகம் மிக [illegible] அதுகொண்டே ஒருவர்க்கொருவர் காதலுற்ற ஸ்திரீ புருஷர்கள் பெரியோர்கள் ஒப்பாமையால் முயற்சி தடைப்பட்டு வருந்து கிறார்கள். நம் தேசத்தில் ஏற்பட்ட விவாகங்களின் கட்டுப்பாடு அத்தேசத்திலேயிருக்குமாயின், இவ்வித வருத்தம் ஒருவர்க்கு முண்டாகாது. அத்தேசத்தில்ஒவ்வொருவருக்கும் "அழகுவாய் ந்த அரசகுமாரி என்னை மணந்தாளில்லை" என்று அழுதுகொ ண்டிருந்த அற்டனைப்போல் வருத்தமுண்டாய் வருகின்றது. ஓர் வித்துவான் ஜாதிசங்கேதத்தால் ஏற்பட்ட தொழில்களைக் குறித்துத் தமதபிப்பிராயத்தைப் பின்வருமாறு எழுதியிருக்கி ன்றார். அஃதாவது "ஒவ்வொரு ஜனங்களுக்கும் ஜாதிக்கேற் பவே கல்வியுந் தொழிலுமிருத்தல்வேண்டுமென்று ஏற்படுத்து வது மிகவு மநுசிதம்; மிக அநீதி; வெகு குற்றங்களுக்குக் காரணம். மனிதர்கள் மனம் சுதந்திரமாதலால், அதைக் கட்ட ஒருவரும் வல்லவரல்லர். ஒருவன் தர்மசாஸ்திரகாரரே ளுதிய காரணமற்றகட்டுப்பாடுகளை வணங்கிஒப்புக்கொள்வனோ? ஓர் பிராமணன் தம்முன்னோர்கொண்ட தொழிலைவிட்டுத் தன் மனம்போனவாறு படைத்தொழிலைக் கைக்கொள்வான். மற் றொரு சுற்ற க்ஷத்திரியன் தனது இராணுவத்தொழிலைவிட்டுத் வித்தை கற்பிக்க முயலுவான். ஒருவன் செல்வத்தி லவாவும்

[illegible]

றப்படல வியாபாரங்களையும், ஆடுமாடுமுதலியவற்றைக் காத்த லையும், பயிர்த்தொழிலையுங் கைக்கொள்வான். மூன்றாம்வரு ணத்தனாய வொருவன் தன தொழிலைவிட்டு முன் வருணத் தோர் தொழிலை விரும்புவான். நான்காம்வருணத்தவனும் தன திகைத்தொழில், அடிமைத்தொழிலாதியவற்றை யொழித்து முன்வருணத்தோர் தொழிலை எடுத்துக்கொள்வான். அப்பொ ழுது "ஒருவரும் உயர்ந்தோர்தொழிலைக் கருதலாகாது. அங் ஙனம் ஓர் கீழ்வருணஸ்தன் உயர்ந்தோர் தொழிலைக் கைக்கொ ள்வனாயின், அரசன் அவன்பொருளைப் பறித்துக்கொண்டு இரா ச்சியத்தைவிட்டு அகற்றல்வேண்டும். தனது தர்மம் குணம ற்றதாயினும் பிறர்தர்மம் மற்றொருவர்க்குதவாது. பரதர்ம த்தைக்கைக்கொண்டவன் ஜாதியைவிட்டு உடனேநீங்குவான்" என்று தொடங்கிய ஸ்மிருதிவாக்கியங்களால், தான் தனக்கே ற்றதொழிலைக் கைக்கொள்ளல் விரோதமாயின், அதனால் எவ் வளவு புத்திக்குறைவுண்டாகும்" என்பதாம். இவ்விதம் சொ ல்வது இக்காலத்தில் இங்கிலாந்துதேசமொன்றிற்குத் தகுமே யன்றி ஏனையவிடங்களுக்குப் பொருந்தாது. அத்தேசத்திலே பலதொழில்களையுங் கற்றற்பொருட்டுப் பல பாடசாலைகளும், ஏழைக்குழந்தைகளை இரட்சிக்க ஏராளமான பொருளும் இருத் தலால், அவ்விடத்தில் மனதிற்கிசைந்ததொழிலைக் கைக்கொள் ளலாம். அஃதில்லாத இத்தேசங்களிலும் மற்றைத்தேசங்க ளிலும் தகப்பனே பிள்ளைக்குக் கற்பிக்கவேண்டியிருத்தலால், இருவருக்கும் ஓரே தொழில் ஏற்படும். சிலநாளைக்கு முன்பு இங்கிலாந்துதேசத்தில் எல்லாவித அதிகாரங்களும் எல்லாருக் கும் சாமானியமாய்க்கொடுக்கலாமென்று ஏற்பட்டது. அதில், ஒரு கோவிலில் பூசைசெய்துகொண்டிருந்த ஒருவனுக்கு உயர்ந் தவதிகாரங் கொடுத்ததற்காகப் பொறாமையுற்று, மந்திரிப்பதவி யிலிருக்கும் ஓர் பிரபு ஒரு பெரிய கூட்டத்தில், இனி நற்குல த்தார் உத்தமதொழிலைக் கைக்கொள்ளலாகாதென்று வெகு தீ ரமாக எடுத்துரைத்தார். ஜாதிபேதங்கள் ஜனங்களின் கூட்ட த்தில் பல கட்டுகளை ஏற்படுத்துமென்பதில் தடையில்லை. பெ ரும்பான்மையும் இவ்வித ஜாதியேற்பாடுகள் நம் தேசத்திற் போலவே மற்றைத்தேசங்களிலு மிருக்கின்றன. அவைகளை முற்றிலும் மறப்பது ஒருக்காலும் இயலாது. பிராமணர், க்ஷ த்திரியர்முதலிய நான்குவருணங்கள் இத்தேசத்தின்மாத்திர மிருக்கின்றனவாயினும், விவாகமுதலியவற்றிலுள்ள நிர்ப்பந்த ங்கள் ஐரோப்பாமுதலிய தேசங்களிலு முண்டென்றன்றோ முன் பிரசங்கத்தை முடித்தோம். அவற்றுள், இத்தேசத்த வர் ஜாதியேற்பாட்டிற்கும் ஐரோப்பியர் ஜாதியேற்பாட்டிற்கும் ஓர் வேற்றுமையுண்டு. இத்தேசத்தவர் ஏற்பாடு ஜாதிகள் வே தங்களிலும், ஸ்மிருதிகளிலும் சொல்லப்படிருத்தலால் நமக்கு த்தோன்றியபடி மாற்றக்கூடாதென்பது. மற்றென்றோ, அவ் வக்காலத்து ஜனங்களின் கட்டுப்பாடாதலால், வெகுஜனாபிப் பிராயத்தைநோக்கி மாற்றக்கூடுமென்பது. சிலர் இவ்வித ஜாதிகள், மற்றைச்சட்டுப்பாடுகள் இவைகள் வேதங்களிற்சொ ல்லப்பட்டனவாதலால், இவைகளை நாம் தள்ளக்கூடாதென்று ம், அது நம்பத்தக்கதல்லவென்றும் சொல்லுகிறார்கள். இவர் கள் சொல்லும் வார்த்தைகளுக்குள் அடங்கியவர்களுக்கு இவை கள் ஆவசியகமாயினும் மற்றவர்களுக்கு அவை ஆவசியகமில்லை யென்பது அவர்கள் கருத்து. தமது சுவப்பிரயோசனத்தை நாடிப் பிராம்மணர்களேற்படுத்திய ஜாதிமுதலியவற்றின் மேள

[illegible]

ரவம் ஒருவிதம் ஒழிந்துபோயினும், மனுமுதலியோர் தர்மசாஸ்திரங்களி லெழுதிய ஜாதிவிவஸ்தைகள் எவ்விதம் ஒழிக்கக் கூடுமென வினவில், அவர் அதற்குத் தமது குற்றத்தை மாற்ருமல் விடையளிக்கின்றனர். எங்ஙனமெனில், மனுமுதலாயினேரெழுதிய எல்லாத் தர்மங்களும் உங்கள அனுஷ்டானத்திலிருக்கின்றனவா? எவ்வொரு தினமும் நூ. தடவை நீங்கள் தர்மங்களைக் கடந்துநிற்கின்றீர்களல்லவா? உங்கட்கு மனுவென்பவர் சூத்திரர்களிடம் தானமவாங்கக்கூடாதென்று மறுத்திருக்க, சூத்திரனேனும் மற்றெந்தவருணத்தவனேனும் கொடுத்தால் நீங்கள் வாங்குவதிற் றடையுண்டோ? இக்காலத்தில் எக்குலத்திற் பிறந்தவனுயினும் அவன் பணமுள்ளவனுயின், அவனிடம் எந்த மகாப்பிராமணனும் கைகட்டி தந்திரம்செய்து பணம்பறிக்கின்ருனல்லவா? "உயர்ந்தஜாதியானுடன் தாழ்ந்த ஜாதியான் ஒத்த ஆசனத்திலுட்கார்ந்தால், அவன் தொடையை நெருப்பினுற்சுட்டு அவ்விடம்விட்டு அவனைத் துரத்தவேண்டும்" என்று மனுவுரைத்தபடி பிராமணனேடு சமமாக வுட்கார்ந்தசூத்திரனுக்கு இவ்வளவு தண்டனையேற்பட்டிருக்க, இக்காலத்துப்பிராமணர் தாமே கடைத்தெருவிற்சென்று அவ்விடத்தில் வியாபாரஞ்செய்யும் ஓர் மிலேச்சனிடம் கூசாமற் பாயிலுட்காரவில்லையா? இக்காலத்தவர் தாம் ஜாதிமதாசாரங்களிலே விசேஷ நம்பிக்கையுள்ளவராயினும் பட்டணங்களிலும், கிராமங்களிலும், வீடுகளிலும் நடக்கும் ஒவ்வொரு ஆசாரங்களையும் முன்னேரெழுதிவைத்தவற்றையுங் கலந்து ஆலோசிப்பராயின், அவற்றுளுண்டாகிய வேறுபாடுகள் நன்ருய் வெளியாகுமென்பதிற்றடையில்லை. கல்கத்தாமுதலிய நகரங்களிலே தர்மசபைக்கும் மற்றச் சமாஜங்களுக்கும் அக்கிராசனதிபதித்துவமடைந்தவர்கள் பெரும்பாலும் சூத்திரர்களாகவே யிருக்கின்றார்கள். அவர்களிடமுள்ள குமாஸ்தாமுதலானவர்கள் பிராமணர்களாகக்காணப்படுகின்றார்கள். தர்மராச்சியமாகிய இவ்விராச்சியத்திலும் முன்னுள்ளோர் மந்திரிகள் அநேகர் பெரும்புகழ்பெற்ற சூத்திரர்களாகவே யிருந்தார்கள். இப்பொழுதும் பிராமணர்களிற் பலர் மற்றவருணத்தவர்களுக்குள் வேலைக்காரராகவேயிருக்கின்றார்கள். வடநாடுகளிற் பலர் மாமிசமாதியவற்றை விற்பதுமுதலிய இழிந்த தொழில்களைக்கொண்டு பிழைத்துவருகிறார்கள். மனுமுதலியோர் ஜாதிப்பிரம்சத்திற்குக் காரணமாக எடுத்துரைத்த பல தொழில்களைச் செய்தும், இக்காலத்தவர் அப்பிராமணர்களை ஜாதியினின்று விலக்குவதேயில்லை. பிராமணர்களுட் சிலரோ மனுதர்மசாஸ்திரத்திற் சொல்லிய தர்மங்கள் இந்த யுகத்திற் குபயோகமில்லையென்றும், பராசர் சொல்லியதே இக்காலத்திற்கு வேண்டியதென்றும், மனுவுரைத்தவற்றை நாம் அனுஷ்டித்த லவசியமன்றென்றும் சொல்லுகின்றனர். ஐரோப்பியர்களுடன் அதிக சகவாசமுண்டாகியதால் கல்கத்தா, பம்பாய், மதிராஸ்முதலியவிடங்களில் இந்துக்களின் ஜாதிநியமங்கள் அநேகமாய்க் குறைந்துவருகின்றன. ஆயினும், அவ்விதக்கட்டுப்பாடுகளை எவ்விதத்திலுமொழிக்கவேண்டுமென்று திவஜங்கட்டி ஆங்காங்குபதேசித்துவரும் கிறிஸ்தவப்பாதிரிமார் முயற்சி எவ்வளவும் பயன்படவில்லை. நமது தேசத்திலும், ஐரோப்பியர் வசிக்கும் மற்றெந்தத்தேசத்திலும் ஜாதிக்கட்டுப்பாடுகள் வரவரக் குறைந்துவருவதை நன்ருய்க் காணலாம்.

இன்னும் வரும்.

[மொழிபெயர்ப்பு.]

[illegible]

விஞ்ஞாபனம்.

நண்பர்காள்! சற்றுக் கவனியுங்கள்!

நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள், மீமாஞ்சை, நியாயம், புராணம், தர்மசாஸ்திரம் ஆக வித்தைகள் பதினான்கு. ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், அர்த்தசாஸ்திரம் இந்நான்குஞ்சேர்ந்து வித்தைகள் பதினெட்டு என்று எணக்கிடப்பட்ட வித்தைகளுள் ஒன்ருய புராணமென்பது ஆதிகோடிகிரந்தமாய்ப் பிரமதேவன முகத்தினின்றும் வெளிவந்தமையால், பிரமமென்ப பெயர்தாங்கி ஒன்ருகவேயிருந்தது. அவ்வளவுபெரிதாகிய ஓர் புராணத்தை ஓத ஜனங்களுக்கு வலியின்மையை யுணர்ந்து கருணைமிக்குற்ற பிரமதேவனாதி பதினெண் முனிவர்கள் அக்கிரந்தத்தைச் சுருக்கி ஒருகோடி கிரந்தமாகச் செய்து, பிரமமுதலிய பதினெண்விதப் பெயர்களாற் பிரித்துப் பதினெட்டாக்கிய புராணம சிலகாலம்வழங்கிவந்தது. பின் அவ்விதப் புராணங்களையும் அப்பியசிக்க ஜனங்களுக்கு வலியின்மையறிந்ததை யுணர்ந்தவரும் துவாபரயுகத்தி னிறுதியிற் பிறந்தவருமான வாதராயணமுனிவர் அப் புராணங்களைக் கற்று "அவற்றின் பொருளை இந்நான்குலக்ஷக் கிரந்தங்களிற் சுருக்கினேம்" என்று பலருமறியஎடுத்துரைத்து, மூன்றுகூடியபடி நான்குலக்ஷக்கிரந்தங்களாகச் செய்தருளினர். அவைகளே இக்காலத்து வழங்கும் பதினெண் புராணங்கள். அவைகளின் பெயர்களும், அவைகளில் நாமறியவேண்டிய விஷயங்களும் இப்பிரமவித்தியாபத்திரிகையின் முதற்புத்தகம் கூஅ-வது பக்கந் தொடங்கிப் பண்டிதர்மணியாய பத்திராதிபரவர்களால் வெளியிடப்பட்டனவாதலால், அவ்விஷயத்தை இங்கு நாம் எடுத்தெழுதாதொழிந்தோம். அப் பதினெண்புராணங்களும் சுலோகரூபமாயிருத்தலாலும், எல்லோருமறியத்தக்க எளியநடையில்லாமையாலும அவைகளை எளிய வசனநடையில் எழுதிப் பிரமவித்தியாபத்திரிகையின் வாயிலாக வெளியிட, பத்திராதிபரவர்கள் அநுக்கிரகம், அன்பு, கருணை முதலியவற்றிற் கிடமாய் நாம் இப் பெருவிஷயத்தில் முயன்றோம். அவற்றுள், அநேக ஞானசாத்திரங்களுள்ளே முதன்மைபெற்றதும், வேதாந்தசூத்திரத்தின் பொருளை வெளியிடுவதும், படைத்தல், காத்தல், அழித்தலென்னும் முத்தொழிற்கு மிடமாயும், கபடநாடகசூத்திராவதாரியாயும் யதுகுலத்திற் பிறந்து ருக்குமணி மணவாளனென நடித்த பரமான்மாவின் சரித்திரத்தை வெளியிடுவதுமாகிய ஸ்ரீ பாகவதத்தின் பொருள்களை இங்கே நாம் எடுத்துக்கூறுவாம்;—

ஸ்ரீமந்நாராயணனுடைய பெருமையை இனிது விளக்கும் இப்பாகவதம் பதினெண் புராணங்களி லடங்கியதென்பதில் ஓர் பெரிய விவாதம் உண்டு. சில ஆப்தர்கள் இப்பாகவதம் பதினெண்புராணங்களிற்சேர்ந்ததன்றென்பதற்கு ஐந்து காரணங்களையெடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். அவைகள் வெகு சமத்காரங்களுடன் பிரதிவாதியை நோக்கி, நிந்தாவசனங்கள் நிரம்பிய சில வாக்கியங்களைப் பிரயோகித்து, அதுகொண்டே ஜெயம் கையிற் கிடைத்ததாய் எண்ணிய ஓர் சைவர் எழுதிய "பாகவதசித்தாந்தசந்திரிகை" என்பதில் மறுக்கப்பட்டனவாயினும், அவைகள் அநேக புராணங்களைக்கற்றுணர்ந்து உண்

[illegible]

மையறிந்த ரசிகர்களுள்ளங்கவர வலிமைபெற்றன வன்றும். அவைகளுட் சில சமாதானட்போலிகளே நாம் சமாதானங்களே ன வொப்பினும், ஒருவழியும் அவர் சமாதானங்களால் மறுத்தற்கி யலாதொன்றிருப்பதனை அடியிற்காண்க. அஃதென்னையெனில், "சத்தியவதியின் அருமைப்புதல்வராகியவேதவியாசர் பதினெ ண்புராணங்களையுமருளிச்செய்து, அவற்றின் பொருள்விளமை ந்த பாரதத்தையியற்றினர்" என்று பெறப்பட்ட வசனத்தானு ம், இப்பாகவதத்தில் நான்காமத்தியாயத்தில் "கர்மமார்க்கங்க ளிலதிகாரமற்றவராய ஸ்திரீகள், சூத்திரர், பதிதப்பிராமணர்க ளுக்கு வேதமோதுதல்கூடாமையால், அவர்கள் நற்கதியைப் பெறவேண்டிப் பாரதத்தை முனிவரியற்றினர்" என்று காண ப்படுவதானும், பாரதமெழுதியபின்னும் மனம் ஒழிவுபெறாது வாதராயணமுனிவர் சரஸ்வதிநதிக்கரையி லுட்கார்ந்து சிந்திக் குங்கால், உலகவியல்பெல்லாமுணர்ந்து உயர் வீணபாணியாய்த் தோன்றிய நாரதரென்னும் பிர்மரிஷி இவருக்குத் தத்துவோ பதேசஞ் செய்தபின், இவர் இப்பாகவதத்தையியற்றினரென்று வெளியாவதால், பதினெண்புராணங்களுக்குப் பின் மாபாரத த்தையியற்றி, நாரதமகாமுனிவருபதேசத்தால் மனத்திடம்பெ ற்ற வியாசபகவானியற்றிய இப்பாகவதம் பதினெண்புராணங்க ளிலடங்குவது எங்ஙனம்? அவற்றுளடங்கியது வேறு பாகவ தமே. இவ்விதம் இவ்வாசங்கையை அவர் மறுத்திலரென்பது அறிஞர்களறிந்த விஷயமேயாம். இனியும் அவர் மதத்தை யனுசரித்து இப்பாகவதம் பதினெண் புராணங்களு ளடங்கிய தென்பதில், நடுவுநிலைமையுள்ள பண்டிதர்மணிகளேனும் மற் றையவரேனும் இப்பத்திரிகைவாயிலாகத் தமது யுத்திகளை வெளி யிடுவார்களாயின், அவருக்குப் பல வந்தனங்கள் செலுத்தி, அ வர் மனமுவந்தருளிய உத்தமயுத்திகளை உட்கொள்வோம். சித் தாந்தசந்திரிகைமட்டில் எமதுள்ளங் குளிர்ந்ததின்று. அந் தோ! யாதுரைப்பேம்! இச்சந்திரிகை, பாகவதம் பதினெண் புராணங்களி லொன்றென்று சொல்லவெழுந்து, ஒன்றும் புரா ணமன்றெனச்சொல்வதற்கு மாறாக வாதராயணமுனிவர் நே ரிற்செய்ததொன்றுமில்லையென முடித்து, "சாந்திகழிக்க வே தாளமுதித்த" தென்று வழங்கும் மூதுமொழிக்கு மறு உதா கரணமாயிற்று. இப்பாகவதம் பதினெண்புராணங்களி லடங் கியதேனும், வெளிப்பட்டதேனும் எமக்குச் சிறிதேனும் அதில் முயற்சிக்குறைவில்லை. அதை நாம் முதலில் எடுததுக்கொண் டது அஃதோர் பெரிய ஞானநூலாதலானும், அதிலுள்ள வி ஷயங்கள் யாவருமறியத்தக்கனவாதலானும், ஸ்ரீமந்நாராயண னுடைய திருவவதாரச்சரித்திரங்கள் அதிற் காணப்படுதலானு மென்க. இவ்விஷயத்தில் எம் முயற்சி நிறைவேற எமது நண் பர்கள் எம்மையநுக்கிரகிப்பாரென அவரது மேலான கனத்தை யெதிர்பார்க்கின்றோம்.

இங்ஙனம்,
சிதம்பரவாசி
ஹாலாசிய நாதசாஸ்திரி."

பாகவத வசனம்.

முதலாவது ஸ்கந்தம்.

யாம் மூவகைப்பாவங்களையும் ஒழிந்த வலிமைபெற்ற முகு ந்தனென்னும் முழுமுதற்கடவுளின் திருவடிகளை உள்ளத்திலி

[illegible]

இதி. ஸ்ரீசிதம்பரவாஸி
நா. ஹாலாஸ்யநாதசாஸ்த்ரீ

ஸ்ரீமாகவதம்
ப்ரதமஸ்கந்தாரம்பஃ

—:0:(*):0:—

[illegible]

ருத்தி அவ்வுத்தம குணங்களை எடுத்துரைப்போமாக. குழந் தைகள் பேசும் மழலைச்சொற்போன்ற எமது சொல்லும் ஸ்ரீம ந்நாராயணன் குணாமிருதங்கள் அடங்கியதாதலால், அதைக்கே ட்டருள்வார்கள் பெரியோர்கள். ஸ்ரீமத் பாகவதத்தின் அரும் பொருள்களை எளிய வசன நடையில் எழுத ஹாலாஸியநாத னென்னும் பெயர் பூண்ட யான் தொடங்குகின்றேனாயினும் குற்றங்கள் நிறைந்த எனது வாக்கில் குணமென்னும் புழு வூன்ற இடம்உண்டாகும் போலியெழுத்துக்களைப்போல, ஆங் காங்கு உண்டாகும் குணங்களைக்கண்டு பெரியோர்கள் மகிழ் வார்களாக. இப்பாகவதம் முதல் ஸ்காந்தம் முதல் அத்தியா யத்தில் சாஸ்திரங்களினுண்மை. ஸ்ரீகிருஷ்ணாவதாரம், சிருஷ் டிமுதலியவற்றின் இரகசியம், மற்றுமுள்ள அவதாரங்களின் கதைகள், கிருஷ்ணன கண்ணன் சரித்திரங்கள், தர்மத்தின் உண்மை இவைகளைக்குறித்து ஆறுகேள்விகள் முனிவர்களால் சூதமுனிவரை நோக்கிக்கேட்கப்பட்டன.

முதல் அத்தியாயம்.

வாழ்த்து.

சத்தியமெனப்பெயர் தாங்கியதும், முக்குணங்களாற்பிறந் த தேவர்கள் முதலியோருக்கு முதற் காரணமும், சாந்தோக்கி யம் முதலிய பலவேதாந்தங்களிற்கூறியபடி தேயு, அப்பு, அன் னம் ஆகிய மூவகை வஸ்துக்களுக்கு அதிஷ்டானமும், தன் னொளி உள்ளதும, மனம்வாக்குக்கு எட்டாதநிலைமையில்நின் று ஆதி பிரமதேவனுக்கு ஆசிரியவடிவாய்த் தோன்றி, ஆதி த்திய மண்டபத்தை அகமாய்க்கொண்டு, அதில் ஜீவகோடிகளை ப்பிரேரிக்கும் ஆண்மை பெற்றுச்சேதனாசேதனப் பிரபஞ்சத் தை அதிஷ்டித்து, ஆகமங்களின் உட்பொருளாய் விளங்கும் அநாதி உண்மைப்பொருளை உள்ளத்தில் இருத்துவாம். ஸ்ரீம த் லக்ஷ்மீ ரமணன் முகமலர்த்தேன் துளிபோன்றதும் உத்த ம தர்மத்தைக்காட்டும் கருவியும் பொறாமையற்ற பெரியோர்க ள் விரும்பத்தக்கதும், உயர்ந்தபலனளிக்கும் உத்தமவஸ்துவை க்காட்டுவதும் பாகவதமென வழங்கப்பட்ட இப்புராணம் ஒன் றே என்றறிக. ஓ ரசிகர்களே! வேதமென்னும் கற்பகவல்லி யிற் பிறந்து, கிளிமுகத்தால் சிறிதுகூத்துண்டு, பலரசம்ததும் ப அமிர்தம் பெருக வெளிவந்த பாகவதமென்னும் பரமபலத் தை அனுபவியுங்கள்.

கதைத்தொடர்பு.

முற்காலத்திற் பிரமதேவன் தாம் சிருட்டித்த ஆதி மனிதர் களாகிய நான்கு வருணஸ்தர்கட்கும் இடங்குறிக்க எறிந்த ம னோமயமாய ஓர் சக்கரம் வந்து நின்ற இடமாதலால் நைமிச மெனப்பெயர் பெற்றதும், அநாதியில் ஸ்ரீமது எம்பிரான் திரு மால் திருப்பதிகளில் ஒன்றாயதும், இப்பரதகண்டத்துக்கு அல ங்காரமுமான ஓர் வனமுண்டு. அவ்விடத்திலே சௌனகர் முத லிய பல ரிஷிகள் சுவர்க்கலோகம் முதலிய போகங்களைக்கருதி தீர்க்கசத்திரமென்னும் பெயரால் ஆயிரம் வருஷங்களில் முடிக் கத்தக்க ஓர் யாகத்தைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கை யில், ஓர்தினம் உதயகாலத்தில் காலைக்கடன்களை முடித்துஅக் கினியை ஆராதித்து பரமதர்மமாகிய பாகவததர்மங்களை அறி

[illegible]

யககருதி, அக்காலம் அங்கு எழுந்தருளியும், பௌராணிகமணி யும், பரமேஷ்டிபோன்றவருமான சூதனெனப்பெயர் பூண்டவா தராயணமுனி சிஷ்யனை, உசிதமான பூசைசெய்து அவர்முகத் தில்விடை எதிர் பார்த்து அடியில் வரும் ஆறு வினுக்களை எழுப் பினார்கள். ஐயா! பௌராணிகமணியே தாம் வாதராயண முனிவரிடம் சகல புராணங்களையுமறிந்து வெளியிட்டவராகை யால் ஆயுள்வலி குறைந்து, ரோகங்களாற் சிதைந்து, அறியவே ண்டிய வெகு விஷயங்களை அறியவலிமையற்றுக் கிடக்கும் கலி காலத்தவரான எமக்குக் கருணைமாரி சொரிந்து சாஸ்திரங்களி னுண்மை இன்னதென்றும், உலகெலாங்கடந்த உயர்ந்த ஒளி யாய் உத்தம சுலோசனாய் முனிகுலமகனீயனாய் எழுந்தருளிய ஸ்ரீமந்நாராயணன் வசுதேவன் மனைவியாய தேவகியிடம் மனி தவடிவங்கொண்டு பிறந்ததற்குக்காரணமும், அவருக்குண்மை யிலுள்ள படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொ ழில்களின் இலக்கணமும், எவ்வக்காரணங்களால் அவர் எவ்வெ த்திருவவதாரம் செய்தனரெனவும், கோவர்த்தனோத்தாரணம் முதலிய அமானுஷ கிருத்தியங்கள் அவர் செய்தது எங்ஙன மெனவும், அவர் தமது பரமபதம் சென்றபிறகு தருமநிலை எவ்வகைஆயிற்றெனவும் எமக்கு உபதேசித்தருள்கவென்றனா.

முதலாமத்தியாயம் முற்றிற்று.

வரும்.

சிதம்பரவாசி,
ஹாலாசியநாதசாஸ்திரி.

ப்ரம்மவித்தியா.

ஐயா,—கவனியுங்கள்!

எம்மால் இதுவரையில் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வந்துள்ள மதாசாரியர்களுடைய சரித்திரங்களுள் ஒன்றாய ஸ்ரீசங்கராசாரியசுவாமிகள் சிஷ்யர்களான ஹஸ்தாமலகாசாரியர் சரித்திரத்தில், ஸ்ரீபகவத்பாதசுவாமிகள் சந்நிதியில் ஹஸ்தாமலகாசாரியரவர்களால் பன்னிரண்டு சுலோகங்கள் உரைக்கப்பட்டனவென நாம் எழுதியிருப்பது கண்டு, நமது நண்பர்களிற் சிலர் இப் ப்ரம்மவித்தையில் விவரிக்கப்பட்டுவரும் அச் சுலோகங்களைக்காண்பதில் விருப்பமுள்ளவர்களாயிருத்தலால், அவர்கள் கண்டுகளிப்பதின் பொருட்டு நம்மால் அடியில் எழுதப்படும் அப்பன்னிரண்டு சுலோகங்களும் நமது நண்பர்கள் அனைவருக்கும் மனமகிழ்ச்சியை உண்டாக்குமெனக்கருதி நாம் இங்குவருமாறு விவரிக்கலானோம்.

ஹஸ்தாமலகாசாரியர் உரைத்தசுலோகங்களின் பொருள்.

மனமும் மற்ற இந்திரியங்களும் சேட்டிக்க நிமித்தமாய், அதில் விகாரங்களும் கடந்து ஆகாயம் போன்று கதிரவன் கண்ணுள்ளவனைப் பிரேரிப்பதுபோல் நடத்தனாய்நிற்பவனும், [௧] அக்கினிக்கு உஷ்ணத்தன்மைபோல் இயற்கைபறிவைச் சொரூபமாய்க்கொண்டு, மனமுதலிய இந்திரியங்களை அதிட்டிப்பவனும், நிர்விகாரனும், [௨] கண்ணாடியிற் காணும் போலிமுகம்

[illegible]

நம்முகத்தின் வேற்றுமை யற்றதுபோல், சிற்றறிவுள்ள ஜீவனாய்த்தோன்றியும் அவனுடன் அபேதம் பெற்றவனும், [௩] கண்ணாடி முதலிய நிர்மல வஸ்துக்கள் இல்லாவிடம் விகாரமற்று நிற்கும் முகம் போல் விஷய வாசனையற்ற விடத்தில் நிர்விகார சைதன்னிய நிலையில் நிற்பவனும், [௪] மனம் இந்திரியங்கள் முதலியவையற்றவனும், அவைகட்குயிராய்நிற்பவனும, அவைகளுக்குப்புலப்படாதவனும, [௫] தன்னொளியால் மற்றவையைப்பிரகாசிக்கச்செய்பவனும், அவைகளிற் சூரியன் அநேகமாய்த்தோன்றுவதுபோல் விஷய சம்பந்த வேறுபாட்டாற்பலவாய்த்தோன்றுபவனும், (௬) உலகத்திலுள்ளோர் கண்களுக்கு ஒரே நிமிஷத்தில் முறையின்றி ஒளியளிக்கும் சூரியனைப்போல் உலகத்தார் உள்ளங்களை நடாத்துபவனும், (௭) உலகத்தில் ஒவ்வொரு கண்ணாலும் அளவிடப்படாத ஒளியைப்பெற்ற சூரியன கண்களுக்கு வேண்டியமட்டில் ஒளியளிப்பதுபோல் வாசனைகளுக்கேற்ப விஷயங்களைநடாத்துபவனும், [௮] அலைகள் அலைந்துநிற்பினும் அசையாத்தன்மைபெற்ற அம்பலமணிபோல் விகாரங்களடையும் விஷயங்களில் விகாரமற்றவனாய்த் தோன்றுபவனும், [௯] தன்கண்ணை மறைத்த மேகம் சூரியனை மறைத்து ஒளியற்றவனாக்கியதென விவகரிப்பதுபோல அவித்தை ஆன்மாவைக்கடந்ததென்னும் வியவகாரத்திறகிடமானவனும், [௰] ஒவ்வொரு வஸ்துக்களிலும் பற்றற்று எங்கும் நிறைந்து ஆகாயம்போன்று எங்கும் நிறைந்த நித்திய அறிவான நிர்மலனும் யானே. (௧௧) உபாதிகளின் சேர்க்கையால் படிகமணிகள் பலவர்ணங்களாய்த்தோன்றுவதுபோலும் அலைகளின் சைவு சந்திரிகையினிடம் தோன்றுவதுபோலும், போலிப்பேதமும், போலியசைவும் பரிபூர்ணமாகிய வஸ்துவினிடம் தோன்றுகின்றது.

முற்றிற்று.

☞ மேற்கண்ட ஒவ்வொரெண்களும் ஒவ்வோர் சுலோகத்தின் முடிவாகக்கொள்க. ஒவ்வொரு வாக்கியங்களும் ஒரே பயனிலையைக்கொண்டுமுடிந்து தொடர்ந்துநிற்றலால், இங்ஙனம் ஓரேவாக்கியமாய் மொழிபெயர்த்தனம்.

ஸம்ஸ்கிருதபாஷை.

இதிகாசம்.

[முன் தொடர்பு.]

கதாசரித்சாகரம் முதலிய கிரந்தங்களால் பாணினி மகாிஷியுடன் ஓர்காலத்தில் வசித்தவராய்வறியப்பட்ட வாருசி யென்னும் மறுபெயருடைய காத்தியாயனமகாிஷியவர்கள், தாம் எழுதிய வியாகரணசாஸ்திரவார்த்திகமென்னுங் கிரந்தத்திலே "வியாசபருடசிஷாதசன்டாளபிம்பாஸாஞ்சா" என்று ஓர் வார்த்திகமெழுதி, அதில் வியாசாசாரியர்பெயரைக் குறிப்பிட்டிருக்கின்றார். அதுபற்றியும் வியாசாசாரியர் அவருக்கு முன்னிருந்தாரென்று ஏற்படும். அதுகொண்டே கிரீக்தேசசரித்திரமெழுதிய [Schmitz] என்பவர், யவனர்களெனப் பெயருடைய

[illegible]

[illegible]

கிரீக்கர்கள் இந்துஜனங்களை விட்டுப்பிரிந்து ஐரோப்பாதேசத்தையடைந்தகாலம் சற்றேறக்குறையக் கலியுகாதி [௧௧௦௦] வருஷங்கள் அதாவது மேற்றிசையார்வழக்கப்படி கி. மு. [௨௦௦௦] வருஷங்களுககு முன்னென்று எழுதியிருக்கின்றாராதலின், பாரதம் அதற்குமுன் இந்துக்களும், யவனர்களும் சேர்ந்திருந்த காலத்தில் எழுதப்பட்டதென்று வெளியாகின்றதன்றோ. இது நிற்க; வியாகரணசாஸ்திரத்திற்குப் பாஷியஞ்செய்தவரும் ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகளுக்குக் குருவாகிய ஸ்ரீகோவிந்த முனிவருக்குக் கிரகஸ்தாச்சிரமத்தில் வித்தியாகுருவுமாகிய ஸ்ரீ பதஞ்சலிமகாரிஷியானவர், தாமெழுதிய மகாபாஷியத்தில் "சபாராஜா மனுஷ்யபூர்வா" என்னுஞ் சூத்திரத்திற்கு உதாரணங்காட்டுங்கால் சந்திரகுப்தனென்னும் பெயர் எடுத்திருப்பதால் சுமார் ௩௦௦௦-வருஷகாலத்திற்குள்பிறந்தவராயிருக்கவேண்டுமென்று நிச்சயிக்கவேண்டியிருக்கின்றது. அவர் செய்த யோகசூத்திரமென்னுங் கிரந்தத்திற்கு வியாசமுனிவர் பாஷியஞ்செய்திருக்க, அவர் ௫௦௦௦- வருஷங்களுக்குமுன் பிறந்தவராதலெங்ஙனமெனின், அதனை நன்காராயுமிடத்து இப்பதஞ்சலி மகாமுனிவரும், வேதவியாசமுனிவரும் யோகபலத்தால் நெடுங்காலம் பூமியில் வசித்தவர்களென்றே சொல்லல்வேண்டும். இல்லாவிடில், மிகச் சமீபகாலத்திற்பிறந்த ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவ் வேதவியாசமுனிவரைக் கண்டதாகவும், அவருடன் கலந்துபேசியதாகவும் எழுதிய அவர் சரித்திரம் பொய்த்துவிடுமன்றோ? அதுபற்றியே இக்காலத்து யோகசமாஜத்தார் [Theoophist] இப்பொழுதும் வியாசாசாரியார், ஸ்ரீபதஞ்சலி மகாமுனிவர், ஸ்ரீ பகவத்பாதசங்கராசாரியசுவாமிகள் என்னுமிவர்கள் யோகபலத்தால் ஜீவித்திருக்கிறார்களென்று வழங்கிவருகிறார்கள். அன்றிச் சிதம்பரபுராணத்திலும் வெகுகாலத்திற்கு முன் பதஞ்சலிமகாமுனிவரவதரித்ததாகச்சொல்லப்பட்டிருப்பதும், அதுகொண்டேயாம். ஆயினும், நாம் ஊகிப்பது யாதெனில், வியாசமகாமுனிவர் பாரதமெழுதியகாலத்திற் பதஞ்சலி முனிவர் பிறந்திரார்; அன்றிப் பிறந்திருந்தும் அக்காலத்தில் யோகசாஸ்திரமெழுதாதிருக்கலாம். ஏனெனில், மாபாரதத்திலே ஆநுசானிகபர்வத்தில் பஞ்சயதசித்தாந்தாத்தியாயத்தில் "ஹிரணியகர்ப்பன் யோகசாஸ்திரத்திற்குப் பழைய ஆசிரியன் அதாவது முதலாசிரியன் வேறொருவனில்லை" என்று எழுதியிருக்கின்றார். சாங்கியத்திற்குக் கபிலாசாரியரை யாசாரியராக வெழுதியபடி, அக்காலத்திற் பதஞ்சலிமகாரிஷி பிறந்திருப்பாராயின், யோகமதத்திற்குஆசிரியராக அவரையே குறிப்பிட்டிருக்கக்கூடும். இதனால் நாம் வியாசாசாரியர்காலத்திற்குப் பின்பே உதித்திருக்கவேண்டுமென்று எண்ணுகிறோம். மற்றுஞ் சிலரபிப்பிராயப்படுவதென்னையெனின், அவ்விடத்தில் வியாசாசாரியர் ஒவ்வொரு மதத்திற்கும் முதலாசிரியரைக் கூறவெழுந்தனராதலின், யோகமதத்திற்கு ஹிரணியகருப்பனே முதலாசிரியனென்றெண்ணி "ஹிரணியகர்ப்பன் யோகசாஸ்திரத்திற்கு முதலாசிரியர் வேறொருவரில்லை" என்று முதலாசிரியனென்னும் பதத்தால் அவரைக் குறித்தார். அதுகொண்டே ஸ்ரீ நாகேசபட்டர் முதலிய வித்துவான்கள் தாமெழுதிய வையாகரணமஞ்சூஷை முதலிய கிரந்தங்களில் பிரமமீமாஞ்சையையெழுதினவரும், பாரதத்தையியற்றினவரும், யோகபாஷியஞ்செய்தவரும் ஒருவரோ என்று எழுதியிருக்கின்றார்கள். ஆராயு

[illegible] (THEOSOPHIST) [illegible] (Mariss) [illegible]

ங்கால், இம்மகாபாரதம் ௫௦௦௦- வருடங்களுக்கு முன்னெழுதியதாய்த் தெள்ளெனவிளங்கும். அவ்விதமிருக்க, இக்காலத்தவருளொருவராய் இந்துதேசசரித்திரமெழுதிய [Maris] மாரிஸ் என்பவர், பாரதம் ௩௦௦௦-வருடங்களுககு அதாவது கி. மு. ௧௨௫0 வருஷங்களுக்கு முன் எழுதப்பட்டதாய் எழுதியிருப்பது சரியானகாரணமற்றதும், நம்மவர்களைப் பகட்டுவதுமாயுள்ளதாதலால், அதை நம்பத்தக்கதல்ல. இம்மகாபாரதம் பல தத்துவசாஸ்திரங்களினுண்மைகளுடன் வெளியிடப்பட்டதென்று முன் ஒருவாறு எழுதியிருக்கின்றோம். இதில் முற்காலத்தவர் வசனநடை யிலையென்றறியும்படி சிலபாகம் வசனமாயெழுதப்பட்டிருக்கின்றது. இடையே சற்சிலவிடங்களிலும் வசனநடையுண்டு. நாம் இராமாயணத்திற்கு மிதற்கும் தாரதம்மியம் விசாரித்தவிடத்தில, ஒருவிதம் மற்றவர் சொல்லிய ஓர் யுத்தி மறுக்கப்படவில்லையெனச் சிலருக்கு அபிப்பிராயமிருப்பதால், அதனை மீண்டும் பிறிதோர்வழியைக்கொண்டு மறுத்துக்காட்டுவோம்: அஃதாவது இராமாயணம் மகாபாரதத்திலும் சீர்திருத்தமுள்ள நடையி லெழுதப்பட்டுள்ளதென்பதே. அஃதுண்மையேனும் பாரதத்தில ஆவ்விதம் சிலபாகமுண்டென முன்பு சொல்லினோம். இராமாயணத்தில் அவ்வித நடையொன்றேயிருப்பது அதைப் பிற்காலத்துதித்ததெனச்சொல்லுதற்குக் காரணமாகா. முற்கூறிய பல காரணங்கள் அதை முந்தியதெனவே ஸ்தாபிக்கும். இதுவிஷயத்தில் இதுவே முடிந்ததுணிபு. உலகத்திலே ஜனங்களின் நாகரிகமும், சீர்திருத்தமும் அடிக்கடி ஓர் விவஸ்தையின்றி மாறிமாறிவருவது உலகவியல்பே. அதற்குத் திருஷ்டாந்தம்;—இக்காலத்தவர்களெழுதும் நடை முற்காலத்துதித்த காளிதாசன் முதலிய மகான்களெழுதிய கிரந்தங்களின நடையினும் மிகச் சீர்திருத்தக்குறைவாயிருப்பது எல்லோரு மறிந்தவிஷயமே. இங்ஙனமிருக்க, இவ்விரண்டையும் பார்த்தறிந்த ஓர் மேதாவி இக்காலத்தவர் வாக்கு முந்தியதென்றும், அவரது பிந்தியதென்றும் நிச்சயிப்பாரல்லவா? அஃதுண்மையாகுமா? மேலும், இக்காலத்துஜனங்கள் இப்பொழுது இத்தேசத்திலடைந்திருக்கும் ஒற்றுமையீனத்தையும், வறுமையையும, சீர்கேட்டையும், மத்தியகாலங்களிற் பல கொடுங்கோன்மன்னர்களாற்பட்ட கஷ்டநிஷ்டூரங்களையும் ஒருவர் புஸ்தகத்தி லெழுதியிருப்பாராயின், அதனையும் இராமாயணத்தையும் ஒருங்குசேர்த்து நோக்கி, அப்பண்டிதர் இஃதினும் பிந்தியதெனச்சொல்லுதற் சிறிதேனும் தடையுளதோ? ஏனெனில், இராமாயணகாலத்தில் வர்ணிக்கப்பட்ட பட்டணங்களின் ஏற்பாடுகளும், ஜனங்களின் நாகரீகங்களும், அப்பாஷையின் மேலான நடையும் இக்காலத்திலெங்குங் காண்ப தரிதினுமரிதே. ஆதலின், ஓரளவையிலடங்காத இத்தன்மைய காரணங்களைக்கொண்டு இது முந்தியது இது பிந்தியதென்று சொல்வது முற்றிலும் பொருந்தாவாம். இராமாயணத்திலெடுத்துக்காட்டிய நாகரீகம் மிகச் சிறந்ததென்பது இராமாயணத்தைக்குறித்து நாமெழுதப்போவதிலெடுத்துக்காட்டப்படும். இம் மகாபாரதத்தில் அநேக சூட்சுமார்த்தங்கள் நாமறிதற்பாலதுண்டு. அவைகளைத் தாமே முயற்சிசெய்து வெகு யந்திரங்களின்சகாயத்தாற் கண்டுபிடித்ததாகச் சொல்வதுடன், நமது மேற்றிசைவித்துவான்கள், நம்மவர்கள் அவற்றையறிந்திலரெனப் பரிகாசமுஞ் செய்துவருகின்றனர்.

[illegible]

திருஷ்டாந்தமாய் ஓர் சங்கதியை எடுத்துக்காட்டுவோம்: அவர்கள் ஆகாயத்திற் காணும் நக்ஷத்திரங்கள் நாம் வசிக்கும் பூமண்டலத்தைப்போன்ற பெரிய அண்டங்களென்றும், அதை நம்முன்னோர்க ளறியாமல், புண்ணியபுருடர்கள் அங்ஙனந் தோற்றுகின்றனரெனப் பிதற்றினரென்றும், இங்ஙனம் இவர்கள் மடைமை வேதங்களிலும் வெளியாயிற்றென்றும், அதுபற்றியே வேதத்தில் "நட்சத்திரங்களென்பவை புண்ணியசாலிகளின் சோதிகள்" எனச் சொல்லப்படுகிறதென்றும் சொல்லுகிறார்கள். இவையெல்லாம் வேதங்களின் பொருளை யறியாதும், பாரதமுதலிய கிரந்தங்களைப் படித்தறியாதும், பெயர்மாத்திரத்தில் இந்துவெனச் சொல்லும் இந்துப்போலிகளுடன் சொல்லி வெல்லலாமேயன்றி மற்றவிடம் முடியாது. ஏனெனில், இதுவிஷயத்தை மகாபாரதம் ஆரணியபருவத்தி னுட்பருவமாகிய இந்திரலோகாபிகமனபடலத்தில், அருச்சுனனும், மாதலியும் ஒருவர்க்கொருவர் சம்பாஷித்ததா யெழுதப்பட்ட சில சுலோகங்களால் அவ்வாசிரியமணி எடுத்துக்காட்டியிருக்கின்றார். அச்சுலோகத்தின் பொருள் "அவ்விடத்தில் சூரியன் காந்தியில்லை; சந்திரன் காந்தியில்லை; அக்கினி சொலிப்பதில்லை; தம்முடைய காந்தியைக்கொண்டே தாம் விளங்குகின்றன. தூரத்திலுள்ள தீபங்களைப்போல் அவைகளே சிறியவடிவமாய் நட்சத்திரங்களென்று நமக்குத் தோன்றுகின்றன. அவைகள் தத்தமிடங்களிற் பிரகாசித்துக்கொண்டிருக்கின்ற பெரிய உருவமுள்ள இடங்களைப் பாண்டவன் கண்டான்" என்று தொடங்கி "அந்த உலகங்களைக் கண்டு ஆச்சரியமடைந்த அருச்சுனன் மாதலியை நோக்கி இஃதென்னையென வினவ, அவன், ஓ அர்ச்சுனா! நீ பூமியில் வசிக்குங்கால் நட்சத்திரங்களாய்த் தோன்றிய பிண்டங்களிவை. இதில் புண்ணியசாலிகள் வசிக்கின்றார்கள் என்று சொன்னான்" என்பதாம். ஆதலால், நாமிவ்விடமிருந்து காணும் அண்டங்கள் புண்ணியசாலிகள் வசிக்குமிடங்களெனவும், தன்னொளியுள்ளனவெனவும், சில அங்ஙனமில்லாதனவெனவும் வெளியாயிற்று. ஆராயுமிடத்து நம் கண்ணுக்கு எட்டாத தூரத்திலுள்ள சில மண்டலங்கள் நாம் வசிக்கும் பூமிக்குச் சூரியமண்டலம் ஒளிதருவதுபோலத் தன் சமீபத்திலுள்ள சில அண்டங்களுக்கு ஒளிதரத்தக்கனவாயிருக்கலாம். ஆயின், இக்காலத்தவர் சோதித்தவழி அங்காரகமண்டலமொன்று தவிர ஏனையவிடங்களிற் பிராணிகளிருப்பதாய் ஊகிக்கவிடமில்லை. அங்காரகமண்டலமோ பூமியினும் சமமாய் வெளிவந்திருக்கவேண்டியதாதலானும், அதற்குப் பூமியின் சம்பந்தமுள்ளதெனப் பொருள்படத்தக்க பௌமன் என்னும் பெயரிருப்பதாலும், மனிதர்கள் வசித்தற்குரிய சில கால்வாய்களிருப்பதாய்க் கண்ணாடிமுதலிய கருவிகளாற் சோதிக்குமிடத்துப் புலப்படுவதாய்த் தோற்றுவதாலும் அங்ஙனம் துணிதலுக்கு இடமாகும். இவ்விதமிருக்க, அநேக அண்டங்களிலே பிராணிகளிருப்பதாகச் சொல்லும் பாரதம் எங்ஙனம் யுத்திக்கிணங்குமெனில், கூறுவாம்: உலகத்தைச் சிருஷ்டித்த கடவுளுக்கு இவ்வண்டத்தின் மாத்திரம் ஜனங்களையும் பிறவற்றையும் உண்டாக்கி ஏனையவண்டங்களைச் சூனியமாக்குவதில் காரணமில்லாமையால், அங்கும் ஜனங்களும் பிறவும் சிருஷ்டிக்கப்பட்டேயிருக்கவேண்டும். ஆயினும், மற்ற அண்டங்களிலுள்ளவர்கள் நம்போலொத்தவர்களா யிருக்கமாட்டார்

[illegible]

களெனச்சொல்லும் சிலர் சித்தாந்த மொப்பத்தக்கதே. அதுபற்றியே மாபாரதத்தில் மனிதர்கள் தவிர மற்றவர்களே அங்கு இருப்பதாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. உலகத்தில் புண்ணியபாவங்களுக்கேற்பப் பல விசித்திரவிடங்களையும், பல போகங்களையும் கடவுள் உண்டாக்கியிருத்தல்வேண்டுமன்றோ? எமக்கு ஈசுரன், புண்ணியபாவம், சுவர்க்க நரகங்கள், ஜன்மாந்திரம் முதலியவற்றில் நியாயமான நம்பிக்கையுண்டு. இங்ஙனம் வேதார்த்தத்தை வெளியிடவந்த பாரதத்தி லெழுதியிருப்பதால், அவர் எடுத்துக்காட்டிய வேதத்தின் பொருள் "நக்ஷத்திரங்களாக நாம் காண்பது புண்ணியசாலிகளிருக்குமிடமே" என்பதாம். அக்காலத்தவர்களுக்குத் தூரதிருஷ்டிக்கண்ணாடிமுதலிய கருவிகள் இல்லையே அவர் எங்ஙனம் அவைகளைக் கண்டிருந்தாரென்னில், அவர்களுக்கு யோகம் முதலிய அருங்கருவிகளே பெருங்கருவிகளாமென்க. அதுபற்றியே யஜுர்வேதத்தில் "சந்திரமண்டலத்தில் கருமையாகத்தெரிவது பூமியைச் சார்ந்தது" என்றிருப்பதுங் காண்க. அம்மண்டலங்களில் நெருப்பில்லையென்றது பிராணவாயுவைக்கொண்டு உயிர்த்துவாழும் நம்போலிகள் இருக்கப் போதுமான நற்காற்றில்லாதவிடமாதலால், அவ்விடத்தில் அக்காற்றைக்கொண்டு விளங்கும் நெருப்பு அவ்விடமிருப்பதரிதே. நெருப்பில்லையாயின் அங்கு ஒளியேதென்னில், ஒளியும் நெருப்பும் ஒன்றுபட்டதன்று. நெருப்பென்பது கட்டைமுதலிய வஸ்துக்களைப் பற்றித் தகிக்குந் தன்மையும், உஷ்ணத்தை யுருவமாயுங்கொண்டது. ஒளியென்பது இரத்தினமுதலியவற்றிலும் காணப்படுமாதலால், அது ஒளியிலும் வேறாகும். அவ்வண்டங்கள் கடவுளினருளால் அநாதாரமானவிடங்களில் நிற்பதாக வறியப்படுகின்றது. அவைகளிலொன்றே இந்திரலோகமென்றும்வெளிப்படுகின்றது. ஏனையவுலகங்களிருக்குமிடங்களைப் பாரதத்தைக்கொண்டு பின்பு வெளியிடுவோம்.

வரும்.

கடிதங்கள்.

கடிதர்கள் அபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

சம்பாஷணை.

[முதற்புத்தகம் ௬௫௰-ம் பக்கத்தொடர்பு.]

கொ. அறிவினின்றும் உலகம் உதிப்பதென்றுரைப்பது சொல்லால் சொல்வதன்றி அநுபவமின்றே.

சா. உலகினின்றும் அறிவுதிப்பதென்று நீரும் சொல்லால் சொல்வதன்றி அநுபவமின்றே.

கொ. அநுமானத்தால் கூறுகின்றோம்.

சா. யாமும் அநுமானத்தால் கூறுகின்றோம்.

கொ. எங்ஙனம் அநுமானம்?

சா. உமக்கு எங்ஙனம் அநுமானம்?

கொ. சாணியில் தோன்றும் புழுவுக்கு அறிவு அபின்னமாயிருப்பதுபோல், சரீரத்திலும் அறிவு அபின்னமாய்க் காணப்படுகின்றது.

சா. சொப்பனத்தின்கண் தோற்றும் உலகிற்கு அறிவு எங்ங

[illegible]

[illegible]

[illegible]

विवादः

[illegible] (௧௫) [illegible]

—:( ):—

देवदत्तः [illegible]

यज्ञदत्तः [illegible]

दे- [illegible]

य- [illegible]

दे- [illegible]

य- [illegible]

दे- [illegible]

य- [illegible]

दे- [illegible]

य- [illegible]

दे- [illegible]

य- [illegible]

दे- [illegible]

य- [illegible]

दे- [illegible]

य- [illegible]

[illegible]

वेदान्तसंग्रहः

अप्पयदीक्षितोपन्यासः

(௧௨) [illegible]

௭. [illegible]

னம் முதற்காரணமோ, அறிவினின்றும் அச்சொப்பன வுலகம் எங்ஙனம் தோற்றியதோ அங்ஙனமே, இப்போது காணப்படும் இவ்வுலகிற்கும் அறிவே முதற்காரணமும், அவ்வறிவினின்றே யுலகம் தோற்றியதுமாம்.

கொ. இவ்வாறே பேசிக்கொண்டு வந்தால் முடிவுபெறவில்லையே. ஆதலால் முடிவு சொல்ல வேண்டும்.

சா. உலகும், உலகத்தை அறியும் அறிவும் ஒன்றை விட்டு ஒன்று பிரிந்திரா; சூரியனும் பிரகாசமும்போலாகலின்.

கொ. ஆனால், உலகை அறியும் அறிவு, அறிபடுபொருளான உலகு ஆகிய விரண்டும் நித்தியமும் சத்துமா?

சா. அல்ல; அநித்தியமும் அசத்துமேயாம்.

கொ. பின்னை, நித்தியமும் சத்துமாயிருப்பதியாது?

சா. சுழுத்தியின்கண் சாக்ஷியாய் விளங்கும் சலனமற்ற அறிவே நித்தியமும் சத்துமாம். (அதன்கண் உலகும், உலகை அறியும சலனமுள்ள அறிவும் ஓர்காலத்துத் தோற்றி விளங்கி மறைகின்றனவாம்)

கொ. சுழுத்தியின்கண் அறிவு உளதென்பதெங்ஙனம்?

சா. சுழுத்தியின்கண் சுகமாய் நித்திரை செய்தேனென்று சொல்லுமிடத்து, சுகானுபவம் காணப்படுகின்றமையாலும், அவ்வனுபவம் அறிவினுக்கே விளங்கவேண்டுமாகையாலும், அதைத்தள்ள யாராலும் கூடாமையாலும் அறிவுளதென்றே திண்ணம்.

ஓர் நண்பன்.

வேதாந்தசங்கிரகம்.

அப்பயதீக்ஷிதர் உபநியாசம்.

[12-ம் பக்கத்தொடர்பு.]

௭. மேலும், "எவன் ஒரு தேவதையை அதுவேறு தான் வேறென்றெண்ணி வேற்றுமையுடன் வழிபடுவோனோ அவன் பசுவைப்போலுண்மையறியான்" என்று வேதங்களில் நன்றாய் எடுத்துவெளியிடப்பட்டிருக்கின்றமையால், ஒருவன் மற்றொரு தேவதையை வழிபடுங்கால் மனத்தில் அதுதானென்று அபேதத்தோற்றத்துடன் வழிபடவேண்டுமென வெளியாயிற்று. ஒருவன் வழிபடுகிறவனும், மற்றொருவன் தமது வழிபாட்டுக் கிடமாயுள்ளவனென் றெண்ணுவதால் அத்துவிதபத்திகெடுமல்லவா? வேதாந்தங்களினெல்லாவற்றிலும் சொல்லப்படும் பரமபொருளாகிய பரப்பிரமம கை, கால் முதலிய அவயவங்களற்றது என்பது துணிபு. உலகத்தில் யாம் காணும் அவயவமுள்ள பொருள்களெல்லாம் நாசமுளதாய்க் காணப்படுவதாதலும், "முடிவுள்ளதும், சர்வஞ்ஞத்தன்மையும் பெறாது" என்றுசூத்திரகாரர் சொன்னதாலும் என்றறிக. பரம்பொருளாகிய பிரமம் நம்மைப்போலல்லது வேறெந்த வழியிலேனும் கை, கால் முதலிய அவயவங்களோடு கூடியிருக்குமேல், அதற்கு ஓர்வித விகாரமுண்டாகுமென்றும், அவயவங்களுள்ள விடத்துத் தோன்றக்கூடிய குற்றங்கள் அநேகமாய்த் தோன்றுமென்றும் பலவிதஆக்ஷேபங்களுக்கிடமாகும். "பிரமனிருந்திலன், ஈசானனிருந்திலன்" என்றுதொடங்கியபல வேதாந்தவாக்கியங்களால் பரப்பிரமப்பொருள் பிரமா, விட்டுணு, உருத்திரன் இவர்களின் மேலாய துரியதத்துவமென வெளியாயிற்று. அது

[illegible]

௮. [illegible]

௯. [illegible]

கொண்டு சகுணமூர்த்தியையுபாசிப்பது அவ்வளவு ஆக்ஷேபமற்றதெனச்செய்யும்வாதம் நிலைபெற்றது. [அ] மேலும், யோகமென்பது இயமம், நியமம், பிராணாயாமம் முதலிய எட்டு அங்கங்களோடு கூடியதும், தியானமென்னும் ஓர் அங்கத்தில் நிற்பதால், ஜீவனுக்கும், பரமனுக்கும், பரவஸ்துவுக்கு முள்ள வேற்றுமையைப்பற்றிநிற்றலாலும், "யோகம் நிலையுடைத்தன்று" என்று வேதாந்தசூத்திரத்தில் திருவாய்மலர்ந்தருளியதாலும் அவ்விருவகை யோகங்களும் உத்தமர்க்கு உபயோகமற்றதென ஏற்பட்டது. "மனத்தை நிலைநிறுத்துவதே யோகம்" என வேதாந்தங்களில் வெளிப்படும். வேதம கருமங்களைப்போல ஓர்வித அதிகாரிகட்குச் சித்தசுத்தியைக் கொடுக்குங் கருவியென்றே வெளியாயிற்று. இதனால் யோகசாஸ்திரமெனப் பெயர்கொண்ட பகவற்கீதை அப்பிரமாணமெனச்சொல்லக்கூடாது. கர்மயோகமென்றும், விபூதியோகமென்றும் தாம குறிக்கவேண்டிய விஷயமனைத்தையும் யோகமெனவே ஸ்ரீ கண்ணபிரான் குறித்திருப்பதால், அங்கு அவ்வித ஆக்ஷேபம பொருந்தாவாம். ஜீவனோ முக்காலத்திலும் தத்துவப்பொருளின் வேற்றுமை பெற்றதன்று. ஆதலின் அதனைப் பரப்பிரமத்துடன் சேர்த்த லெங்ஙனம்? இதனால் வேதாந்தசாஸ்திரத்தில் யோக சாஸ்திரம் அவ்வளவு பயன்படாதென்று ஏற்பட்டதென்க.

௯. மேலும், சரீரமே ஆன்மாவென்று எண்ணியவர்களுக்கும் ஆன்மா பற்றற்றவனென்பதில் தடையில்லை. பிரமஞானிகளுக்கு காது முதலிய பல இந்திரியங்களிற்சப்தம் முதலியபல விஷயங்களற்றபொழுது, எல்லாவற்றிற்கும் சாட்சியாய்நின்ற அந்தக்கரணத்தில் சங்கற்பமுதலிய தொழில்களிருப்பினும் யாதுங்குற்றமில்லை. அவித்தையும், அதிற்காரியமாயபிரபஞ்சமும், அப்பிரபஞ்சத்தின் காரியமாகிய மற்றெல்லா வாசனைகளையும் அவர் அவ்வத்துவித அறிவால் அகற்றினராதலால் என்றறிக. உலகத்தில் முன்தோன்ற உருவத்தை யற்றிருப்பினும், வறுத்த துவரை முளைப்பதுண்டோ? "புருஷன் பற்றற்றவன்,, "தாமரையில் தண்ணீரைப்போல் அப்புருஷனை வாசனை பற்றாமலிருக்கும்,, என்று பலசுருதி ஸ்மிருதிகளிற்காணப்படுவதால் ஆன்மா முக்காலத்தும் பற்றற்றவனென்பது துணியப்பட்டது. இதை மற்றெவரும் மறுக்கவல்லவரல்லர். "பிரமஞானிகளுக்கு விதியில்லை, விலக்கில்லை, தள்ளத்தக்கதில்லை, கொள்ளத்தக்கதில்லை,, என்று தொடங்கிய பல வேதங்களாற் பிரமஞானிகளுக்கு விதிவிலக்குகளில்லை என்பது நன்றாய் வெளியாகின்றது. சிலர், இது அர்த்தவாதமெனச்சொல்லுகின்றனர். மற்றுஞ்சிலர், தத்தம் வருணாசிரமங்களுக்கேற்ற அநுசிதமென்றும் சொல்லுகின்றார்கள். உத்தமஞானிகட்கே உரித்தென சிலரபிப்பிராயப்படுகின்றார்கள். இவைகள் பிரயோஜனமற்ற பட்சங்களென எண்ணக்கூடாது. ஏனெனில், அர்த்தவாதமாகில் அது உமக்குள்ள பிரமஞானத்தின் பொறுமையைக்காட்டும். இரண்டாவது பட்சம் சமுசயபட்சமென்று சொல்லத்தக்க கருமஞானவாதமாய் முடியும். மூன்றாவது பட்சத்தில் பிரமஞானத்துத்தாரதம்மியம் ஏற்படுதலால், அது நிலைபெறாதென்றுமோர் குற்றந்தோன்றும். யாம் காணும் எல்லா உலகமும் இப்பியில் வெள்ளிதோற்றுவதுபோல் அசத்தென அறிந்து, கர்மகாண்டங்களுள் கூறப்பட்டுள்ள பற்பல கர்மவலைகளைவிட்டு விலகிநின்ற அப்பெரியோர்களுக்கு இவ்வித சாஸ்திரங்கள் எவ்விதம்

[illegible]

கட்டை உண்டாக்கும். பற்றற்ற பரமான்மாவின் நிலைமையை அறிந்த பரமயோகியாகிய ஒருவன் இருக்கும் நிலைமை மூக்குணங்களையும் கடந்துவிதிவிலக்குகளற்றுநிற்கும் இடமாதலால், அவனே பரமோத்தமனென்பது உண்மைநூல்களின் துணிபு.

௪0. உலகத்தில் எக்குலத்திற் பிறந்தவராயிருப்பினும் அனைவர்க்கும் இந்தப் பிரபஞ்ஞானத்தில் அதிகாரமுண்டென்பதிற் சிறிதேனுந் தடையின்றாம். சூத்திரகாரர் உத்தரமீமாஞ்சாசூத்திரத்தில் சூத்திர வருணத்தவர்க்கு வேதாந்தத்தி லதிகார மில்லையெனச் சொல்கின்றனரோ வென்னின், அஃது வேதத்தால் அப்பொருளை விசாரிக்கக்கூடாதென்று அதற்குப் பொருள்கொள்ளல்வேண்டுமேயன்றி, மற்றைப்பாஷைகளிலெழுதிய அவ்வித தத்துவங்களை எவ்வித ஈனசாதியிற் பிறந்தவரும் அறியலாமென்று அவரே எடுத்துரைத்திருக்கின்றார். "சுத்ததத்துவத்தாற்பிறந்து ஜன்மாந்திரத்திற் செய்த ஏதோ ஒரு சிறு பாவத்தால் தாழ்ந்த குலத்திற் பிறந்தபோதிலும், முற்பவத்திற் செய்த பல புண்ணியங்களால் நித்தியாநித்திய வஸ்துவிவேக முதலிய பல சாதனங்களைப் பெற்று மோக்ஷேச்சையடைந்தவர்களுக்கு அதிகாரமில்லையெனச்சொல்லல் அமையாதாதலின், எல்லாரும்மோக்ஷாதிகாரிகளே. [௪௧] மேலும், அத்வைதிகளுடைய சித்தாந்தத்தில் கர்மாநுஷ்டானங்களும், அநேக அங்கங்களுடன்கூடிய பக்தியும், எட்டு அங்கங்களுடன் கூடிய ராஜயோகம், அடயோகம், மந்திரயோகம், லயயோகம், லம்பிகாயோகம் முதலிய பல வேற்றுமைகள்பெற்ற யோகங்களும், வேதாந்தங்களிற் பலவிடங்களிலே பலவிதமாகச் சொல்லப்பட்ட உபாசனைகளும் ஒப்பத்தக்கனவே. முன்பு அவைகள் மறுக்கப்பட்டிருக்க அவைகளை எவ்வித மொப்புக்கொள்வதெனில்; அந்தர்முகநிலைமையென்றும், வெகிர்முகநிலைமையென்றும் யோகிகள்கூறுவதுபோல், பாரமார்த்திகமென்றும், வியவகாரிகமென்றும் இரண்டு தசைகள் இச்சாந்திகளொப்பவேண்டியது ஆவசியமாதலால், அவ்விருவகைத்தசைகளுள் வியவகாரிகமென்னுந் தசையில் முற்கூறிய கர்மம், யோகம், உபாசனை இவைகள் பயன்படுமென்பது துணிபு. அதுபற்றியே சூத்திரகாரர் கிரமமாய் உத்தமலோகங்களை யடைந்து முடிவில் பிரமலோகவழியாய்ப் பேரானந்தமெய்தும் வழியை எடுத்துக்காட்டுமிடத்தில், வருணாசிரமதருமம், உபாசனையாதியவை பயன்படுமெனச் சொல்லுகின்றார். ஆதலால், துவிதம், விசிஷ்டாத்வைதம் இவ்விருவகைச் சித்தாந்தங்களைக்கொண்டு அத்தசையில் உபயோகமுள்ளவர்களாவார்கள். இக்கருமம், பக்தியாதியவைகள் பிரமஞானத்தாற்பெறப்படும் முத்தியைத் தடுக்க வலிமையற்றனவாம். வேதங்களில் "இங்கே பிரமத்தையடைகின்றான்" என்று கூறப்பட்டிருத்தலால், ஓர் சித்தாந்தத்திலும் மறுக்கப்படாமலும், சர்வசித்தாந்தசம்மதமாயும் நின்ற இவ்வத்வைதசித்தாந்தமொன்றிற்றான் சைவல்யமுத்திசித்திக்குமென்றுசமஸ்தவாதங்களுக்குமிச்சித்தாந்தத்திலிடமுண்டு. [௪௨] பின்னும் இவ்வித அத்வைதபிரமஞானமில்லாமல், புண்ணியங்களையும், பாவங்களையும் செய்பவர்கள் சுவர்க்கநரகங்களை யடைகின்றார்கள். நாம் கண்கூடாகக் காணும் உலகங்கள் யாவும் அசத்துக்களெனச் சொல்லத்துணிந்தவர்கள், தமக்கு முற்றிலும் புலப்படாத சுவர்க்கநரகங்களுண்டென்று எங்ஙனந் துணிந்தார்களெனின், வியவகாரதசையில் உலகமனைத்தும் சத்தியமென ஒப்புக்கொள்வதாலும், "இவ்வுலகம் உண்டு மறுவுலகமில்லை என்றுரைப்பவன் அடிக்கடி எமவசமாகுவன்" என்று நமன் வாக்கியங்காணப்படுதலாலும் சுவர்க்கநரக முண்டென்பது வெளியாயிற்றெனக.

வரும்.

[மொழிபெயர்ப்பு.]

Printed and Published for the Proprietor at the Brahmavidya Press CHIDAMBARAM.

ப்ரம்மவித்தியா

அநுபந்தம்.

[illegible]

—:(*):—

[illegible]

[illegible]

[illegible]

குதர்க்காசலகுலிசம்.

ஸ்ரீமத் வேதமூர்த்திகாள்! நியாயநெறி கடைப்பிடித்து வாழ்வதொழிந்து வீண் மாச்சரியத்தாலே வேலூர் "லோகரஞ்சனி" பத்திராதிபர் மனோவாக்குக் காயங்கள் சிறிதுங் கூசாது வைவுச்சொற்களை வரைவின்றிப் பிரயோகிக்கிறார். ஓர் பத்திராதிபரே இப்படிச்செய்தால் மற்றையோர்களைச் சொல்வதென். சாக்ஷாத் விஷ்ணுமூர்த்திக்கும், விஷ்ணு பத்தருக்கும் விபூதி ருத்திராக்ஷதாரணம் வைதிகநூல்களிற் கேட்கப்பட்டபடியே அவர்கள் தமிழ்வேதமென்று கூறுகிற திருவாய்மொழியினும் "நீறுசெவ்வே யிடுவாரைக்காணில் நெடுமாலடியாரென்றோடு" என்றும், "கரியமேனிமிசை வெளியநீறு சிறிதேயிடும்" எனவும் போந்த பிரமாணத்தை நாம் காட்டவந்ததேயன்றி, அந்தப்பாட்டுக்களை அவர்கள் கூறுவதுபோல் நாமும் தமிழ்வேதமென்று கொண்டோமில்லை. என்னை? அப்பாட்டுக்கள் பிரத்தியக்ஷ சுருதி விரோதமாய்க் காண்டலினென்க. அவ்வுண்மையையீண்டோர்சிறிது விளக்குவாம்:— சடகோபர் கூறிய திருவாய்மொழியில், விஷ்ணுப்பிரசாதத்தாலேயே மார்க்கண்டேயருக்குச் சிரஞ்சீவித்வம் கிடைத்ததாகக்காட்டி சிவநிந்தையைக் குறிப்பிட்டிருக்கிறது. அப்பாட்டுக்கள் வருமாறு:—[புக்கடிமையினாற்றன்னைக் கண்ட மார்க்கண்டேயனவனை, நக்கபிரானுமன்றுய்யக்கொண்டது நாராயணனருளே] எனவும், [கண்டுதெளிந்துங் கற்றோர் கண்ணற்காளன்றியாவரோ, வண்டுண்மலர்த்தொங்கல் மார்க்கண்டேயனுக்கு வாழுநாள், இண்டைச்சடைமுடி யீசனுடன் கொண்டுசாச்செல்லக், கொண்டங்குத்தன்னுடன் கொண்டுடன் சென்றதுணர்ந்துமே] எனவும் எழுமவைகளாம். இப்பாட்டுக்கள் ஜீவிப்பதற்கு வைதிகப்பிரமாணமெங்கே? வேதாந்தமாகிய ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி யுபநிஷத்தில், "[illegible]"

என்று வந்த வசனங்களால், 'பிரஹ்மாவர்த்தத்தில் மஹாபாண்டீரமென்னு மாலமரத்தடியில், மஹாசத்திரமென்னும் யாகத்தின் பொருட்டுக்கூடிய சௌனகர் முதலான மகரிஷிகள் குருசுச்ருஷார்த்தமாக சமித்துக்களைக் கையிற்றரித்தவர்களும், தத்துவத்தை யறியவேண்டுமென்கிற இச்சையுள்ளவர்களுமாகிச் சிரஞ்சீவியான மார்க்கண்டேயரை யடைந்து பிரசினஞ்செய்தார்கள். எதனால் நீர் சிரஞ்சீவியாக விருக்கின்றீர்? எதனால், ஆனந்தத்தை யனுபவிக்கின்றீர்? என்று வினவியதற்கு மார்க்கண்டேயர் சொல்லுகின்றார். அது பரமரஹசிய சிவதத்வஞான சித்தியாலென்றவளவில், பின்னும் அந்தப்பரமரகசிய சிவதத்வஞானமேதுவென்று கேட்டதற்குப் பின்னுஞ்சொல்லுகிறார். எதனால் தக்ஷிணாமுகரான சிவபெருமான் அபரோக்ஷமாகப்பவிப்பாரோ அதுவே பரம ரஹஸ்யமான சிவதத்வஞானமென்றறியுங்கள். எவர் சர்வத்திலும் பரமகாலத்தில் சர்வத்தையும் தன்னிடத்திலேயே யுபசம்ஹாரஞ்செய்து தன்னுடைய ஆனந்த சுகத்தில் சந்தோஷித்துக்கொண்டிருக்கின்றாரோ, எவர் தனக்குத்தானே பிரகாசித்துக்கொண்டிருக்கின்றாரோ அவரே தேவரென அறியக்கடவீர்களென்று அறிவித்தனர்' என்று வெளிப்பட்டது. இப்படி ஸ்பஷ்டமாய் விளங்கும் வைதிகப்பிரமாணத்திற்கு நேர் விரோதமாக்காணப்பட்ட இந்தப்பாட்டுக்களைத் தமிழ்வேதமென்று எப்படிச்சொல்லலாம்? கிறிஸ்தவர் தங்கள் பைபிலைச் "சத்தியவேத,, மென்று கூறுவதோடொப்பவே இஃது முடிவுபெறும். ஆயின், இக்காலத்திய பாஞ்சராத்திரிகளைப்போல் முற்காலத்தவர்க்கு "வெள்ளைமண்" பூசுதல் வைதிக நூல்களில் கேட்கப்படாமையானும், அவர்களுடைய தமிழ்வேதம் நாலாயிரத்துளெங்கும் மண்பூச விதிப்பது காணாமையாலும் "அந்திய நூலின்விதியவிரோதமே, துன்னேல்பழுதென்றுளத்து" என்று மங்கலநெறி நூலார் காட்டிய நியாயங்கொண்டு அவிரோதாம்ஸத்தைச் சிறிதேதழுவினும். எள்ளத்துணை வைதிகமுங்கூடத் தங்களாழ்வார்களுக்கு மிச்சம்வைக்க மனமில்லாத நம்வேலூரார் தம்மைப்போலவே ஆழ்வாரும் முழுதவைதிகரென்பதை வலித்து வெளியாக்கிக் கொண்டனர். நியாயநெறி கடைப்பிடியாது, அவர், வரம்புகடந்து திட்டுகிறார். அவர் சொந்தத்திலே பத்திரிகை யொன்றிருப்பதால் [மயிருள்ள சீமாட்டி யெப்படி முடிந்தாலும் முடியலாம்] நாம் குதர்க்கங்களை மறுத்து நியாயங்காட்ட வெழுவோமன்றி, நாவிலர், சாகாதொழியுந்தாசர், பொட்டைக்கண், இழுதை என்பவாதியாய் அவர் திட்டி மகிழ்வதுபோல் யாமும் மகிழ்வோமல்லவென்க. திருவாய்மொழியின் பெருமையை யீண்டு விளக்கிலோமாகையால் அதிலுள்ள வாக்கியங்கட்கு அவரெத்துணைத் தப்பர்த்தங்கூறினும், அதனால் வரும் பெருமை யொன்றுமின்றென்க. பிற விஷயங்களை இடம் வந்துழி விரிப்பாம்.

சாமக்குளம், வெங்கடரமணதாஸ்

பத்திராதிபர்க்கு ஓர் கேள்வி.

வித்துவமணிகாள்! இந்தக்கோயமுத்தூர் ஜில்லாவிலும், மற்றும் யாம் சஞ்சரித்த மதுரை, திருநெல்வேலி, திரிசிரபுரம், சேலம், தஞ்சை முதலிய ஜில்லாக்களிலும் வசிக்கும் எல்லாப் பாஞ்சராத்திரிகளும், ஆற்றங்கரை, அல்லது நத்தமேடு, அல்லது களர்நிலம் முதலிய இடங்களிலுள்ள ஓடைக்கல், அல்லது வெள்ளைமண் இவைகளைப்பொடித்து வடித்துக்குழைத்து உடலில் பட்டை பட்டையாய்ப் பூசிக்கொள்ளுவதைப் பல வருடங்களாகக்கண்டு வருகிறேம். இங்ஙனஞ் செய்வதற்கு எந்த நூல்களிலாவது விதியிருக்கிறதா? இருக்குமேல் அவ்வசனங்களை வெளியிடவேண்டுமென்றும், இல்லையேல் இவர்களிங்ஙனஞ் செய்வதற்குக்காரண மின்னதெனத் தெரிவிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிற, ஓர் சந்தேகி.

கிறிஸ்துமதத்தைக் களைதல்.

உலகிலுள்ள பாஷைகளுக்காவது, சாஸ்திரங்களுக்காவது, மதங்களுக்காவது, ஒழுக்கத்திற்காவது இந்தியாவே ஆதியாகும். இவ்வாறே அங்கிலேயரும், ஜர்மானியரும், அமெரிக்கரும், ஏனையோரும் கூறுகின்றனர். எந்தெந்த மதங்களின் நிலைமையையும் இந்துமதத்திற் காணலாம்; இந்துமதத்தின் நிலைமையை மாத்திரம் மற்றெந்த மதத்திலும் காணமுடியாது. இவ்வாறிருக்க, மிலேச்சதேசத்தில் மிலேச்சஜனங்களுக்காக அக்காலதேசவர்த்தமானங்களுக்கியைய, அற்ப படிப்புள்ள மோசே முதலிய அற்பரால் நம்து புராணங்களினின்றும் கற்பித்து எழுதப்பட்ட [முக்கியமாய்க் கூறவேண்டிய சகஜீவ பர லக்ஷணம் அனுசந்தானையுமில்லா] ஆபாசபுத்தகத்தைப்பிரமாணமாகக்கொண்டு, அது ஒரு மதமாக எழும்பி யிங்கும் கொடிகட்டி ஆரவாரஞ்செய்கின்ற கிறிஸ்துமதம், நமது மதத்துட் புகுந்து நம்மவரையெல்லாம கிறிஸ்தவராக்கி வருகின்ற அநீதத்தைப் பற்றி யாதுசொல்வோம்? இதுமட்டும் இவ்விஷமயாக ஒருவரும் கவனிக்காமலிருந்தமையால், பாதிரிகள் இதுதான் சமயமென்று ஆனவரையில் ஒருகை பார்த்துவிட்டார்கள். புருஷர் மனத்தை எவ்வளவு கலக்கினாலும் பெண்பிள்ளைகளால் கிறிஸ்தவராகத் தடையாகின்றதென வுணர்ந்து, எந்தவூர்களிலும் மிஷன் பெண்பாடசாலைகள் வைத்து, இளமையிலேயே பெண்கள் புத்தியைக் கலைத்து, பொய்யும் புளுகும் நிறைந்த பைபிலை நம்பவும், அதிலுள்ள அசங்கியத்தை அநுசரிக்கவும் செய்ததோடு, கிறிஸ்துமதக் கிழங்களான பெண்கள், உயர்குலமாதர்வீட்டிலும் நுழைந்து, கல்வி கற்பித்துத் தையல் கற்றுக்கொடுப்பதுபோல் காட்டி, நமது மதத்தைத் தூஷித்து, கிறிஸ்துமதத்தை நம்பச்செய்கின்றனர். அந்தோ! அந்தோ!! இதுமட்டோ, பாதிரிச்சிகள், ஜமீன்தாரர் சிற்றரசர் பிரபுக்கள்முதலிய வீடுகளிலும் கவுரவமாகவே நுழைந்து, கூடவிளையாடி இன்சொல்லால் பேசி, இடை இடையில் இந்துமதத்தையிகழ்ந்து, கிருஷ்ணன்கதையைப் புரட்டித் தாறுமாறுகத் தந்திரோபாயக்காரரால் எழுதப்பட்ட கிறிஸ்துவை நம்பப்பண்ணிவரும் மோசத்தை யாதென்று கூறுவோம்? நம்மவர்க்கு நாணமில்லையே! அப்படிப்பட்ட மோசக்காரரை வீட்டில் நுழைய இடங்கொடுத்ததாலல்லவா இவ்வளவு அனர்த்தம் வந்தது? இதை யிப்போதுகூட யோசியாவிடில் நமது தலையின் மூளையை உரிஞ்சிவிட்டபிறகா யோசிப்பது?

சனவான்களே!

எந்தவூரிலும் பாதிரிகளுக்கு இடந்தராதீர்கள்; அவர்கள் கல்விச்சாலையில் பிள்ளைகளைப் படிக்க அனுப்பாதீர்கள்; அதிலும் பெண்களை அவர்கள் ஸ்கூல்களுக்குமட்டும் அனுப்பவே அனுப்பாதீர்கள்; யாவரும் எழும்பி அவர்கள் மதத்தைக் கண்டியுங்கள்; கவர்ன்மெண்டு அம்மதமென்று நினைத்து நமது பண்டிதரெல்லாம் அவர் ஜோலிக்குப் போகாமலிருக்கிறார்கள்; இது சுத்த தெரியாமை. இராஜாங்கத்திற்கும்; மதத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. இதுதெரியாமல் வெளியில் பாதிரிகளுடையமதத்தைக் கண்டிக்கப்பயப்படுகின்றார்கள். பாதிரிகள் உள்ளுக்குள்ளே நுழைந்து இத்தேசத்தவரைக்கிறிஸ்தவராக்கிவிட்டு, தேசாபிமானமில்லாமற்செய்து, இங்குள்ள பொருள்களையெல்லாம் வர்த்தக மூலமாகவும், உத்தியோக மூலமாகவும், பென்ஷன்மூலமாகவும், பிறவற்றின்மூலமாகவும் கொண்டுபோய் இங்குள்ளாரை நித்தியதரித்திரராக்கக் கங்கணங்கட்டியிருக்கின்றார்கள். பாருங்கள் கிறிஸ்தவராய்விட்டால் இத்தேசத்தில் அபிமானமிருப்பதில்லை. இத்தேசத்தில் ஆங்காங்குள்ள பொதுச்சபைகளில் ஒரு கிறிஸ்தவராவது சேர்கின்றனரா? அல்லது தேசக்ஷேம நிமித்தம் அவர்க்குத் தனியாகவாவது பொதுச்சபையிருக்கிறதா? இத்தேசத்தில் பிறந்து இத்தேசத்தில் வளர்ந்து இத்தேசத்தில வாழ்ந்து இத்தேசத்தில் சாகும் [ஈஸ்திந்தியர்] பறங்கிகள், இத்தேசத்திற்குக் கெடுதல்செய்யவே கூடிய அங்கிலேயர் சபையில் சேர்கின்றார்களேயல்லாமல், இத்தேசக்ஷேமத்திற்காகக் கூடும் நம்மவர் சபையில் சேர்கின்றார்களா? நாம் டஞ்சமனை அவமதித்து அநாதரவு செய்தமையாலும், செய்கின்றமையாலும் அவர், கிறிஸ்துமதத்தை அநுசரித்துப் பறங்கிகளாய், கையில் கத்தியும், துப்பாக்கியும் கொண்டு, அங்கிலேயர்க்குச் சாதகமாகவும், நமக்கு எதிரிகளாகவுமானார்கள். அப்பறங்கிக்காரர், நாளை ஒருகாலத்தில் ஒருகையில் வாளும், ஒருகையில் பைபிலும் கொண்டு, வாளுக்கு இரையாகின்றையா? அல்லது பைபிலை நம்பிக் கிறிஸ்தவனாகின்றையாவென்று கேட்கத்தான்போகின்றார்கள். அப்போது நாம் கிறிஸ்தவராகவேண்டுவதே. நாம் டஞ்சமனை எவ்வளவு இம்சித்தோமோ, அவ்வளவுக்கும் பழிக்குப் பழி வாங்கத்தான் போகின்றார்கள். நம்மையெல்லாம் பறையராக்கப்போவது நிச்சயம். ஆனதால் நமது மதத்தைக் காக்கவேண்டும்; ஒருவரும் கிறிஸ்துமதத்தில் செல்ல விடப்படாது; சென்றவரையும் நமது மதத்தை அநுசரிக்கச் செய்யவேண்டும்; கிறிஸ்துமதத்தவர் பொருளைக் கொடுத்தும், போகத்தை ஊட்டியும் கிறிஸ்தவராக்கின்றார்கள்; நாம் அப்படிச் செய்யமாட்டோம்; தத்துவார்த்தங்களைக்கொண்டே திருப்புவோம். இதனால் ஜாதியில் சேர்த்துக்கொள்ளச் சொல்லவில்லை. நமது மதத்தை ஊரூராய், கிராமங்கிராமமாய்ப் பிரசங்கித்து, வாதத்தால் பாதிரிகளைப் பறக்கடிப்போமானால், பின்னர் இந்தியாவில் தலைகாட்டமாட்டார்கள். இத்தேசத்தில் அறியாமையால் கிறிஸ்தவரானவர்க்குத் தத்துவார்த்தங்களைப் பிரசங்கித்தோமாயின், அவரே பாதிரிகளிடம் சென்று இதற்குப் பதில்சொல்லென்றும், சொல்லாவிடில் எங்கள்மதத்திற்குச் செல்கின்றேமென்றும் சொல்லி, பின்பு இந்துமதத்தை அநுசரிப்பார்கள். பாதிரிகள் இத்தேசத்தில் இருக்கிறவரையில் நமக்குத் தொல்லைதான். எந்நேரமும் ஏதேனும் விஷம் செய்துகொண்டேதானிருப்பார்கள். அங்கிலேய கவர்ன்மெண்டார் எப்படிப் பார்லிமெண்டென்றும், இந்தியா சக்ரிடேரி ஆபீசென்றும், போர்ட்டென்றும், சட்டநிரூபண சபையென்றும், கலெக்டராபீசென்றும், தாலூகாகச்சேரியென்றும் கிரமம்கிரமமாய் வைத்து இராசாங்க வேலைகளை நடத்துகின்றார்களோ, அவ்வாறே பாதிரிகளும் மிஷன்களைச் சீமையிலும், சென்னை பம்பாய் கல்கத்தா முதலிய விடங்களிலும்

ஸ்கூலென்றும், கோவிலென்றும், பிரசங்கமென்றும், ஜனனி மிஷனென்றும், பத்தகமென்றும், டிராக்ட்என்றும் இன்னும் ஏதேதோ மார்க்கங்களை ஏற்படுத்தி, ஒருவர் போனாலும் ஒருவரிருந்து நடத்தவும், வேலைக்குத்தக்க சம்பளம் இனாம் முதலியவை கொடுக்கவும் வைத்திருக்கின்றார்கள். அவர்களை ஜெயிப்பது நம்மாலாகாது. மிஷன்களும் கவர்ன்மெண்டுபோல்வே யிருக்கின்றன. ஆதலால் நாம் எங்கும் இதுவிஷயமாகச் சபைகள் பலவிடங்களில் கூடி, எல்லாம் மூலசபைக்குக் கிளைகளாக்கி, மிஷன்மாரைப்போல் ஒவ்வொரு காரியத்தையும் செய்வோமாயின், வெகுசீக்கிரத்தில் நமது காரியஞ் சித்தியாகும். கல்வி விர்த்தியாகுமிக்காலத்தில் கிறிஸ்துமதம் தலையெடுக்கவே மாட்டாது. மதாபிமானமுள்ள ஒவ்வொருவரும் ஆங்காங்குள்ள கிறிஸ்தவரை இந்துமதஸ்தராக்க முயலவேண்டும். இதை நம்மவர் ஓர் பெரிய விரதமாகக் கொள்ளவேண்டும்.

மடத்தார் இந்துசமயஸ்தாபனையின் பொருட்டும், கல்விச்சாலை விருத்தியின்பொருட்டும் கவனிக்கவேண்டும். பாதிரிகள் செய்யும் வேலை யாதோ, அதையே செய்ய மடத்தார் ஏற்பட்டமையால், அதை மறந்து வேறுகாரியங்களைச் செய்வது தக்கதன்றென உணரவேண்டும். அங்ஙனம் செய்யாவிடில் நாம் சும்மா இருத்தல்கூடாது. பயனில்லா மடம் இருந்தாலென்ன? இல்லாமற்போனாலென்ன? சொந்தச்சுகத்தினிமித்தந்தானோ மடம் கட்டி, கொள்ளைகொள்ளையாகப்பணத்தைவைத்து மானியங்களை வைத்தது? எந்தெந்தக் காலத்தில் எந்தெந்தப் பிரகாரம் தங்கள் கடமைகளைச் செலுத்தவேண்டுமோ, அவ்வாறு செய்ய வேண்டாமோ? பாதிரிகள் நமது மதத்தாரைக் கிறிஸ்தவராக்கி வருவதை, இனித் தடுக்காவிடில் இம்மடத்தார் வேறுவேலை பார்த்துக்கொண்டு போவதே யுக்தமாகும். இல்லாவிடில் இனிப் பலரால் குறைசொல்லப்படுவார்கள்.

கிறிஸ்துமத வைரி.

மகா-ள-ள-ஸ்ரீ ப்ரம்மவித்தியாபத்திராதிபரவர்களுக்கு முன் ஓர் விண்ணப்பம்.

ஸ்ரீ பகவத்பாதசுவாமிகளவர்கள் பிரபாகராசாரியாருடைய பாலனைநோக்கி நீ யார்? என்று வினவினபோது, அக்குழந்தை, கீர்வாணபாஷையில் ௧௨- சுலோகங்களால் தனக்கு ஜடத்தன்மையில்லையென்றும், ஜடங்களுள் சாக்ஷியாயிருப்பது தானென்றும் மிகத்தெளிவா யுரைத்தனவென்று, ப்ரம்மவித்தியாபத்திரிகையினால் தெரிந்துகொண்டேன். அந்தப் பன்னிரண்டு சுலோகங்களின் உட்பொருள்களைத் தருமங்கரோதுடக்ஷிகளெல்லாம் அறிந்துநடக்கும்பொருட்டு, பத்திரிகைமூலமாய் வெளிப்படுத்த ஒடுக்கத்துடன் பிரார்த்திக்கிறேன். கிஞ்சிக்ஞன்.

☞ கிஞ்சிக்ஞர் கோரியவாறு இப்பத்திரிகையில் வெளியிட்டிருக்கின்றோம். ப—ர்.

சிதம்பரம்

கஞ்சித்தொட்டி யாசகதர்மம்.

இஃது கும்பகோணம் நரசய்யரால் ஏற்படுத்தி நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதன் உத்தேசம், வேலைசெய்யச் சக்தியற்ற கூன், குருடு, முடம் முதலிய ஜனங்களைக் கஞ்சிவார்த்து ரக்ஷிக்கவேண்டுமென்பதே. இது ஒரு பெரிய காரியமாயினும், தீனர்களிடம் தயவுள்ள தனவான்கள் உதவியிருந்தால் நிறைவேறுமென்பதற்கு ஐயமில்லை. உதவிசெய்ய விருப்பமுள்ளவர்கள் நெல், கம்பு, கேழ்வரகு, சோளம் முதலிய தானியங்களாகவாயினும், திரவியமாகவாயினும் சகாயஞ்செய்யப் பிரார்த்திக்கிறேன். இது நாளது மார்கழிமாசத்திற்குள் தயவுசெய்து அனுப்பவேண்டும்.

C. S. நரசய்யர்,
கஞ்சித்தொட்டி யாசகர்,
சிதம்பரம்.

சிதம்பரம்
ப்ரம்மவித்தயாயந்திரசாலையில்
விற்கப்படும்புத்தகங்கள்.

		விலை. ரூ	அ	பை	தபாற்கூலி. ரூ	அ	பை
மகேஸ்வரதண்டகம்.	கிரந்தம்	,,	௧	,,	,,	,,	௬
ஆரியாதண்டகம். லட்சுமிஸதோத்திரம்	(கிரந்தம்)	,,	௧	,,	,,	,,	௬
சாமருத்திரசங்கிதாபாஷியம்	,,	,,	௮	,,	,,	௧	,,
விசாகதுலாபாரபிரபந்தம்.	,,	,,	௧	௬	,,	,,	௬
சிவதத்துவவிவேகம்.	,,	௨	,,	,,	,,	௨	௬
ஆன்மாவும்சரீரமும்	தமிழ்	,,	௧	,,	,,	,,	௬
நீதிக்கீர்த்தனை.	,,	,,	௧	௬	,,	,,	௬
சர்மிஷ்டாவிஜயம்-	தெலுங்கு	,,	௬	,,	,,	,,	௬
ஸ்ரீராமபத்திரவிஜயம்.	[கிரந்தம்)	,,	௮	,,	,,	௨	,,
பிரஸ்னோத்தரராமாயணம்	,,	,,	௩	,,	,,	௧	,,
ஸ்தோத்திரசங்கிரகம்.	,,	,,	௨	,,	,,	,,	௬
விசாகநட்சத்திரமாலிகை.	,,	,,	,,	௬	,,	,,	௬
துதிசங்கிரகம்	[தேவநாகரலிபி)	,,	௧	,,	,,	,,	௬
ராமாயணவினாவிடை.	[தெலுங்கு]	,,	௨	,,	,,	,,	௬
பகவத்கீதார்த்த தீபிகை	{கிரந்தமும்தமிழுரையும்}	௪	,,	,,	,,	௭	,,
ஆச்சரியதர்ப்பணம்	{கிரந்தசுலோகம் தமிழுரையும்}	௧	௮	,,	,,	௨	,,
சங்கரசரித்திரம்.	[தமிழ்]	,,	,,	௬	,,	,,	௬
சகாதேவசாஸ்திரம்.	,,	,,	௧	,,	,,	,,	௬
கந்தபுராணநவநீதம்.	,,	,,	௧௨	,,	,,	௩	,,
மாதர்நீதி.	,,	,,	௬	,,	,,	௧	,,
மனுமுறைகண்டவாசகம்.	,,	,,	௪	,,	,,	,,	௬
சீர்காழிப்புராணம்.	,,	,,	௮	,,	,,	௧	௬
அஷ்டாங்கயோகம்.	,,	,,	௫	,,	,,	,,	௬
கிறிஸ்துமதகண்டனம்.	,,	,,	௧	,,	,,	,,	௬
ஜனோபகாரம்.	,,	,,	௧	,,	,,	,,	௬

விளம்பரம்.

சென்னை, மதராஸ் ரிப்பன்பிரஸில் விற்கும் புத்தகங்கள்.

	விலை. அணா	தபாற்கூலி. ரூ	அ	பை
சர்வஜித்துவருஷத்துரிப்பன் பாக்கெட்பஞ்சாங்கம்.	௬	,,	௧	,,
கிறிஸ்துமதகண்டனம்.	௧	,,	,,	௬
ஜனோபகாரம்.	௧	,,	,,	௬
மனுமுறைகண்டவாசகம்.	௪	,,	௧	,,
மாதர்நீதி.	௬	,,	௧	

ரிபுகிதை.

இப்புத்தகம் சென்னை பெத்துநாயக்கன்பேட்டை ஏகவல்லியம்மன் வீதி, மேலண்டைவாடை 6. கெ- வீட்டில் அத்வைத விவேகசமாஜத்திலொருவரான தி. ரே. திருவேங்கடபிள்ளை யவர்களிடம் ரூபா 2௩. விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

☞ VOL 3
௩. புத்தகம்.

பத்திர கிரயம்
1 வருஷம் 2—12—0
6 மாசம் 1—8—0
3 மாசம் 0—14—0
1 காபி 0—2—6
இலங்கைக்கு, 3—8—0.

ப்ரம்மவித்தியாபத்திரிகை.
மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்

☞ NO.4
இலக்கம்-௪

பத்திரகிரயத்தை மணியார்டராகவாவது, ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால்லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ் மானேஜருக்கு அனுப்புதல்வேண்டும்.

[illegible]

சிதம்பரம்:— ௧௮௮௮ ௵ ஆகஸ்டுமீ ௧௫உ சர்வதாரி௵ ஆவணிமீ ௧உ புதன்கிழமை.

[illegible]

வஜ்ரடங்கமும் இந்துஜெயபேரிகையும்

ஐயா, பத்திரிகாசிரியர்களே! தாங்களெல்லோரும் கிறிஸ்துமத காலனதூடாரி என்பவரை நம்பத்திரிகை வாயிலாக ஒருவாறு அறிந்திருப்பீர்களல்லவா? அவர் இதற்குமுன் "ஜீவனுக்கு தேவனே என்னுந்தீபநாவுக்காப்பு" என்றோர் மகுடஞ்சூட்டி ஓர்புத்தகத்தை எழுதி அச்சிட்டு வெளியிட்டிருக்கிறாரல்லவா? அதுவிஷயத்தில் எமது தாற்பரியத்தையும் வெளியிட்டிருக்கிறோம். அதே கிரந்தக்காரர் மேற்கண்ட இவ்விரண்டு புத்தகங்களையும் தெள்ளிய தமிழ்நடையில் எழுதிவெளியிட்டிருக்கிறார் அதன் பெருக்கையைந்த விஷயங்கள் அப்புத்தகங்களிலடங்கியிருக்கின்றன. வஜ்ரடங்கமென்னும் புத்தகத்தில், பாதிரிகளுக்கோர் நிருபமும். "நம்பிள்ளைகளைப்பாதிரிகள்கூட்டத்தில் சாரவிடப்படா" தென்பதும், ஏகோவாவென்னும் துஷ்டதேவதையினும் நமதுபரமேசுவரர் அருள்வள்ளலாம்,, என்பதும், "விக்கிரகாராதனை அத்தியாவசிக,, மென்பதும் "விக்கிரகங்களினாலே சித்தியுண்டா,, மென்பதும் "வழிபடுதற்கு ஆலயங்கள்வேண்டு,, மென்பதும் "தீமைநன்மைகளிலே ஒவ்வொருவனுஞ்சிறந்திருப்பான், கிறிஸ்தவர்களோ ஜனங்களைக்கடுவேதனை செய்து பொசுக்கிச்சேர்த்துவிலே தேர்ந்தவரா,, மென்பதும் ஆகஏழுவிஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இவைகளைப் பற்றி விரிவாய காரணங்களும் அப்புத்தகத்திலேயே காணலாம். இரண்டாவது புத்தகத்திலோ! "கிறிஸ்துமதநிலை, கிறிஸ்தவர்கள்பைபிலிற்சொல்லும் ஆதிசிருட்டியின் ஆபாசங்கள், கிறிஸ்துமத உற்பத்தியும் அதன்விகற்பமும், பைபில்புத்தகத்தில் நடந்த வியபசாரத்தின் பெருமைகள், நம்து இந்துப்பெண்களை அந்நியரிடஞ்சேர்த்தல் ஆகாதாகாது, தெய்வ வசனங்களெனப்படும் விவிலியநூல் விஷயத்தில் கிறிஸ்தவர்களே ஒத்துக்கொண்டவைகள்,, என்று [illegible]மகுடங்களால் பற்பலவிஷயங்களெழுதப்பட்டிருக்கின்றன. இப்புத்தகங்களிரண்டும் ஆரியர்கள்மன